
தஸ்கியா
ஆன்மாவைத் தூய்மைப்படுத்துதல்
மவ்லானா வஹிதுத்தீன் கான்

# தஸ்கியா

ஆன்மாவைத் தூய்மைப்படுத்துதல்

மவ்லானா வஹீதுத்தீன் கான்


**தமிழில்**

**நூ. முஹம்மது கனி** M.com

தாளாளர், ஹஸ்னத்துல் ஜாரியா (அரசு உதவி பெறும்) நடுநிலைப்பள்ளி

தலைவர், மஸ்ஜிதெ ஹுதா பள்ளிவாசல், புதுக்கோட்டை

அலைபேசி : 94435 93265



**குட்வோர்ட் புக்ஸ்**

**சென்னை.**

தஸ்கியா : ஆன்மாவைத் தூய்மைப்படுத்துதல்

முதல் பதிப்பு : மார்ச் 2025

மவ்லானா வஹீதுத்தீன் கான்

தமிழில் : நூ. முஹம்மது கனி M.Com.,
தாளாளர்,
ஹஸ்னத்துல் ஜாரியா (அரசு உதவி பெறும்) நடுநிலைப்பள்ளி
தலைவர், மஸ்ஜிதெ ஹுதா பள்ளிவாசல், புதுக்கோட்டை
அலைபேசி : 94435 93265

செம்மையாக்கம் : ஃபைஸ் காதிரி M.A.,

English version: Tazkiya : Purification of the Soul
This book is copyright free.

CPS International
Centre for Peace and Spirituality International
1, Nizamuddin West Market, New Delhi – 110013, India.
e-mail: info@cpsglobal.org
www.cpsglobal.org

Goodword Books
A-21, Sector 4, Noida – 201301, Delhi NCR, India. e-mail:
info@goodwordbooks.com
www.Goodwordbooks.com

Center for Peace and Spirituality USA 2665, Byberry Road,
Bensalem, PA 19020, USA.
e-mail: kkaleemuddin@gmail.com

Goodword Books
324, Triplicane High Road, Chennai-600005, India. e-mail:
chennaigoodword@gmail.com
Mob: +91 97908 53944 / +91 96001 05558

பொருளடக்கம் பக்கம்


| | | |
|---|---|---|
| 1. | தன் சுயத்தைத் தூய்மைப்படுத்துதல் | 5 |
| 2. | தஸ்கியாவின் உண்மைநிலை | 7 |
| 3. | தஸ்கியாவின் முக்கியத்துவம் | 9 |
| 4. | தூய ஆன்மாவிற்கே சொர்க்கம் | 11 |
| 5. | நபிமொழி தஸ்கியாவின் அடிப்படை | 13 |
| 6. | தஸ்கியா : ஒரு தொடர்ச்சியான செயல்முறை | 15 |
| 7. | நெறிப்படுத்தப்பட்ட மனத்திலிருந்து விடுபடல் | 16 |
| 8. | தஸ்கியா ஓர் ஆன்மிக ஊட்டச்சத்து | 18 |
| 9. | இறைவழிபாட்டில் ஊகங்கள் இல்லை | 20 |
| 10. | ஒவ்வொரு கணமும் தஸ்கியா | 22 |
| 11. | தவறுக்குப் பின் சுயபரிசோதனை | 24 |
| 12. | இதயம் சார்ந்த தஸ்கியா, மனம் சார்ந்த தஸ்கியா | 26 |
| 13. | வழிகாட்டி தேவை | 28 |
| 14. | தஸ்கியாவிற்கு உரையாடலின் அவசியம் | 30 |
| 15. | இடைத்தரகர் இன்றி | 32 |
| 16. | தஸ்கியாவிற்கு முதலிடம் | 34 |
| 17. | தஸ்கியாவும் சுயபரிசோதனையும் | 36 |
| 18. | தஸ்கியாவும் தன்னடக்கமும் | 38 |
| 19. | இறைத்தூதரின் பிரார்த்தனைகள் | 39 |
| 20. | தஸ்கியாவும் பிரார்த்தனையும் | 41 |
| 21. | தஸ்கியாவின் வடிவம் | 43 |
| 22. | மனச்சாட்சி தஸ்கியாவிற்கு ஒரு வழிகாட்டி | 44 |
| 23. | ஆன்மா தூய்மைப்படுத்தலின் முறை | 46 |
| 24. | தஸ்கியாவிற்கு மிகவும் பயனுள்ள வழிகள் | 48 |
| 25. | தஸ்கியாவிற்கான வழிமுறைகள் என்ன? | 49 |
| 26. | தஸ்கியா : ஓர் அறிவுசார் வளர்ச்சியின் ஆதாரம் | 51 |
| 27. | தஸ்கியாவும் கல்வியும் | 53 |
| 28. | கவனச் சிதறலிலிருந்து காப்பாற்றிக் கொள்ளுங்கள் | 55 |
| 29. | தஸ்கியாவும் காலத்தின் கோரிக்கைகளும் | 57 |

| | | |
|---|---|---|
| 30. | தஸ்கியாவுக்கான நிபந்தனைகள் | 59 |
| 31. | உண்மையை ஏற்றுக்கொள்வது | 61 |
| 32. | தஸ்கியாவும் தியாகமும் | 63 |
| 33. | தஸ்கியா : ஓர் உளவியல் செயல்பாடு | 65 |
| 34. | நேர்நிலை உளவியல் முக்கியத்துவம் | 67 |
| 35. | சுயபரிசோதனை - தஸ்கியாவின்அடிப்படை | 69 |
| 36. | ஆத்ம சுயபரிசோதனையில் எவ்வாறு ஈடுபடுவது? | 71 |
| 37. | ஒரு தேர்வுத்தாளை முன்கூட்டியே பார்ப்பது | 73 |
| 38. | தஸ்கியாவும் உலகைத் துறத்தலும் | 75 |
| 39. | தஸ்கியா : ஓர் ஆயத்தச் செயல்பாடு | 77 |
| 40. | தஸ்கியா இறைவனை அடைவதற்கான வழிமுறை | 80 |
| 41. | தஸ்கியாவின் நோக்கம் | 82 |
| 42. | தஸ்கியாவின் அளவுகோல் | 85 |
| 43. | தஸ்கியாவும் மரணத்தின் நினைவும் | 87 |

# தன் சுயத்தைத் தூய்மைப்படுத்துதல்

குர்ஆன் இறைத்தூதரின் நான்கு பொறுப்புகளைப் பற்றி குறிப்பிடுகிறது. அதில் ஒன்று, ஒருவர் தன்னைத் தூய்மைப்படுத்திக் கொள்ளுதல் (2;129) இது வேதங்களில் கூறப்பட்டிருக்கும் தூய்மையின் முக்கியத்துவத்தைக் கோடிட்டுக் காட்டுகிறது. ஆகவே இறைநம்பிக்கையாளர் வாழ்க்கையில் தங்களை முதலில் தூய்மைப்படுத்திக் கொள்வதற்கு முன்னுரிமை கொடுப்பது அவசியமாகும். இதேபோல் அழைப்புப் பணி செய்பவரும் சீர்திருத்தவாதியும் தூய்மை செயல்முறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டியது அவசியம்.

ஆன்மாவைத் தூய்மைப்படுத்துதல் (தஸ்கியா) பல இஸ்லாமிய கட்டாயங்களை உள்ளடக்கியது. சொந்த மற்றும் ஷைத்தானின் சோதனைகளிலிருந்து தன்னைத் தூய்மைப்படுத்திக் கொள்ளுதல்; பிறரால் ஏற்படும் விரும்பத்தகாத அனுபவங்களை எதிர்கொள்ளும்போது, எதிர்மறையான எதிர்வினைகளைத் தவிர்த்துக் கொள்ளுதல் மற்றும் மனிதன் நேரான பாதையிலிருந்து விலகிச் செல்லுதல் போன்ற எண்ணங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்தல் ஆகியவை இதில் அடங்கும்.

உண்மை என்னவெனில், மனிதன் நேர்மையான இயல்புடன்தான் இறைவனால் படைக்கப்பட்டான். ஆனால், இவ்வுலக வாழ்க்கையில், வெளிப்புறக் காரணிகள் அவனது குணத்தின் இந்த நேர்மையான அம்சத்தைச் சமரசம் செய்து கொள்வது என்பது திரும்பத் திரும்ப நிகழ்கிறது. இது எப்போதும் இருக்கும் சாத்தியக் கூறுகள் என்பதையும் இதில் விரும்பத்தகாத தாக்கங்களைத் தடுக்க தொடர்ந்து முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதையும் மனிதன் அறிந்திருக்க வேண்டும்.

இறைத்தூதர் அவர்களின் பணி எப்போதும் நேர்மை, தூய்மை, போன்ற கொள்கைகளுக்கு வழிகாட்டுதலாக இருந்தது. இந்தச் சூழலில் நபி அவர்கள் மனிதகுலத்தால் சுயதூய்மைக்கான தனித்துவமிக்க ஒரு முன்மாதிரியாகப் பார்க்கப்பட வேண்டும்.

அவர்களின் சமகாலத்தவர்களுடன் ஆன்மாவைத் தூய்மைப்படுத்தும் இந்தப் பணிக்கான இறைத்தூதர் அவர்களின் அணுகுமுறை நேரடியாக இருந்தது. இறைத்தூதர் அவர்களின் அணுகுமுறை பிற்காலத் தலைமுறையினருக்கு மறைமுகமாகத் தொடர வேண்டி இருந்தது. இறைத்தூதர் அவர்களின் சுயதூய்மை, சொற்கள் மற்றும் செயல்கள், அவர்களுடைய தோழர்களின் சொற்களும் செயல்கள் அனைத்தும் (ஸீரா) இறைத்தூதர் அவர்களின் வாழ்க்கை வரலாறு புத்தகங்களில் பதிந்து பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்தப் பதிவுகளிலிருந்து வழிகாட்டுதலைப் பெறுவதைப் பிற்காலத் தலைமுறையினர் தங்களின் கடமையாக உணர வேண்டும். இதைப் படிக்கத் தெரிவித்தவர்கள் நேரடியாகப் படிக்காத, படிக்கத் தெரியாதவர்கள், மார்க்க அறிஞர்களின் உதவியை நாடுவதன் மூலம், அறிஞர்களின் உதவியை நாடுவதன் மூலம் அவர்கள் அந்த வழிகாட்டுதலைத் தங்கள் வாழ்க்கையில் பின்பற்றி நடக்க முடியும்.

◆◆◆

# தஸ்கியாவின் உண்மைநிலை

குர்ஆனில் இரண்டாவது அத்தியாயத்தில் கூறியதுபோல இறைத்தூதர் அவர்களின் சமகாலத்தில் வாழ்ந்தவர்களை வேதத்தையும் ஞானத்தையும் கற்பித்து அவர்களைப் பரிசுத்த மாக்கச் செய்தது கடமைகளில் ஒன்றாக இருந்தது. *(2:129)*. இறைவனைச் சார்ந்த ஆளுமை என்று அழைக்கப்படும் தனித் திறனை தூய்மை இல்லாமல் உருவாக்க முடியாது *(3:79)* என குர்ஆன் கூறுகிறது. மனிதனை இந்த தூய்மைப்படுத்துதல் மட்டுமே சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்லும் என்பதுதான் உண்மை. *(20:76)*

'தஸ்கியா' என்பதற்கு வளர்ச்சி என்ற பொருளும் உண்டு. அதற்கு எடுத்துக்காட்டாக மரத்தைக் கூறலாம். ஒரு விதையின் வளர்ச்சியின் விளைவுதான் மரம். ஒரு விதைக்கு அனுகூலமான சூழ்நிலை உருவாகும்பொழுது. அது துளிர்விட்டு பசுமையான மரமாக வளரும்வரை அது வளர்ந்து கொண்டிருக்கிறது. இது மனிதன் தூய்மையாவதற்கும் பொருந்தும். இந்த அர்த்தத்தில் தஸ்கியா அறிவுசார் வளர்ச்சியையும் உள்ளடக்கியது.

இறைவன் மனிதனைப் பெரும் ஆற்றலுடன் படைத்துள்ளான். மனித ஆளுமையின் இந்த ஆற்றல் தஸ்கியாவின் மூலமாக வெளிக் கொணரப்படுகிறது. இந்த அர்த்தத்தில் மனித ஆளுமையை ஒரு தெய்வீக அடித்தளத்தில் கட்டியெழுப்புவது என்று கூறுவது சரியாக இருக்கும்.

ஒரு மனிதன் நம்பிக்கையை ஏற்றுக்கொண்டால் அவன் ஆன்மா தூய்மையாக்கும் பயணத்தை தொடங்குகிறான். அவன் படிப்படியாக ஒரு தூய்மைப்படுத்தப்பட்ட ஆன்மாவாக மாறுகிறான் அல்லது அறிவுரீதியாகவும், ஆன்மிகரீதியாகவும்

வளர்ந்த ஆளுமை மிக்கவனாக மாறுகிறான். இவன்தான் மறுமையில் நித்திய சொர்க்கத்தில் நுழைவான்.

தஸ்கியாவில் மர்மம் ஒன்றும் இல்லை. தஸ்கியாவை தியானத்தின் மூலம் அடையமுடியாது. ஆனால், சிந்தனை மூலம் அடைய முடியும். இது தன்னைப் பற்றியும், பிரபஞ்சத்தைப் பற்றியும் சிந்திப்பது இறைவனை உணர்ந்து கொள்வதற்கான அறிவுசார்ந்த வாழ்வாதாரத்தைப் பெறுவது போன்றவற்றை உள்ளடக்கியது. இது ஒரு தூய்மையான ஆளுமையை விளைவிக்கும் செயல் முறையாகும். தஸ்கியாவில் மறைபொருளாக எதுவும் இல்லை. இது நன்கு அறியப்பட்ட உண்மை. தஸ்கியா என்பது ஒரு தனிநபர் போராட்டத்தின் விளைவாகும். இது துறவி என்று கூறப்படும் சிலரின் மர்மமான உத்வேகத்துடன் தொடர்புடையது அல்ல.

◆◆◆

## தஸ்கியாவின் முக்கியத்துவம்

நபிமொழி ஹதீஸ் நூல்களில் பதிவு செய்யப்பட்ட ஒரு பாரம்பரிய முறை இங்கு சஹீஹ் முஸ்லிமின் அறிவிப்புகளில் கூறப்பட்டுள்ளது.

இறைத்தூதர் கூறினார்: (சொர்க்கவாசிகள் சொர்க்கத்திற்கு நுழைந்த பின்னர்) சொர்க்கத்தில் அல்லாஹ் நாடிய அளவு இடம் மீதியிருக்கும். பிறகு அல்லாஹ், தான் நாடியவற்றில் ஒரு படைப்பை சொர்க்கத்திற்கென உருவாக்குவான்.

இதை அனஸ் அறிவிக்கிறார்: மறுமைநாளில் வெள்ளை ஆடு ஒன்றின் தோற்றத்தில் மரணம் கொண்டுவரப்படும். பிறகு அது, சொர்க்கத்திற்கும் நரகத்திற்குமிடையே நிறுத்தப்படும் (என அபுகுறைப் அவர்களது அறிவிப்பில் கூடுதலாக இடம்பெற்றுள்ளது.)

பிறகு "சொர்க்கவாசிகளே! இது இது (என்னவென்று) உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்கப்படும். அப்போது சொர்க்கவாசிகள் தலையைத் தூக்கிப் பார்ப்பார்கள். மேலும், "ஆம் (தெரியும்) இதுதான் மரணம்" என்று பதிலளிப்பார்கள். (அவர்கள் அனைவரும் அதை முன்பே பார்த்திருக்கிறார்கள்.)

பிறகு, (நரகவாசிகளை நோக்கி,) "நரகவாசிகளே! இது (என்னவென்று) உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்கப்படும். அவர்களும் தலையைத் தூக்கிப் பார்த்துவிட்டு, "ஆம் (தெரியும்) இதுதான் மரணம்" என்று பதில் சொல்வார்கள். (அவர்கள் அனைவரும் அதை முன்பே பார்த்துள்ளனர்.)

உடனே (இறைவனின்) கட்டளைக்கேற்ப அது (ஆட்டின் உருவத்திலுள்ள மரணம்) அறுக்கப்பட்டுவிடும். பிறகு, "சொர்க்க வாசிகளே! நிரந்தரம்; இனி மரணமே இல்லை. நரகவாசிகளே!

நிரந்தரம்; இனி மரணம் என்பதே இல்லை" என்று கூறப்படும். (ரஹ்மத் பதிப்பகம் தமிழ் மொழிபெயர்ப்பு தொகுதி 4, ஹதீஸ் எண் 5474)

தூய்மைப்படுத்துதல் என்றால் என்ன? தூய்மைப்படுத்துதல் என்பது தன்னை தூய்மையான ஆன்மாவாக ஆக்குவது. அதாவது, சொர்க்கத்தின் புனிதச் சூழலில் வசிக்கத் தகுதியானவராகச் செய்வது. இறுதிநாளில் தூய்மையானவர்கள், சொர்க்கத்திற்கு அழைத்து செல்லப்படுவார்கள். மற்றும் தூய்மையற்றவர்கள் நரகத்தில் தள்ளப்படுவார்கள். இதன் பின்பு மரண சட்டம் முடிவுக்கு வந்ததாக அறிவிக்கப்படும். அதன்பின் சொர்க்கவாசிகள், நரகவாசிகள் ஆகிய இரு சாராரும் தங்களுடைய இடங்களில் நிரந்தரமாக இருக்க வேண்டும். இது ஒரு தனித்துவம் கொண்ட தருணமாக இருக்கும். சொர்க்கவாசிகள் மகிழ்ச்சியின் நித்திய உலகைக் கண்டுபிடிப்பதற்காக பேரின்ப நிலையில் இருப்பார்கள். இதற்கு மாறாக நரகவாசிகள் தங்கள் ஆன்மாவைத் தூய்மைப்படுத்தாத காரணத்தால், இந்த நிலையைக் குறித்து விவரிக்க முடியாத வருத்தத்தையும் நித்திய வேதனையையும் அனுபவிப்பார்கள். இந்தக் கருத்து சந்தேகத்திற்கு இடமின்றி தூய்மைப்படுத்துவதற்கான ஓர் ஆற்றல் மிக்கதாகவும் ஊக்கமாகவும் உள்ளது. அந்த நேரத்தில் மரணம் வந்து நரகத்திலிருந்து தங்களைக் காப்பாற்றும் என்ற கடைசி நம்பிக்கையையும் அவர்கள் இழந்திருப்பார்கள்.

◆◆◆

## தூய ஆன்மாவிற்கே சொர்க்கம்

குர்ஆனின் இருபதாம் அத்தியாயத்தின்படி, இந்த உலகில் தனது ஆன்மாவைத் தூய்மைப்படுத்தி, தூய்மையான ஆளுமையுடன் மறுமை உலகத்தை அடைபவருக்கே சொர்க்கம் என்கிறது. இந்த உண்மை குர்ஆனின் பல வசனங்கள் மூலம் தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளது. சொர்க்கத்தை அடைவது என்பது ஒரு சமூகம் அல்லது குழுவுடன் உள்ள தனிப்பட்ட தொடர்பை அடிப்படையாகக் கொள்ளாமல் தன்னுடைய தனிப்பட்ட தகுதியை அடிப்படையாகக் கொண்டதாகும்.

எனவே, சொர்க்கம் தன்னைத் தூய்மைப்படுத்திக் கொள் பவனுக்கு மட்டுமே கிடைக்கக் கூடியதாக இருக்கிறது. தூய்மை என்பது அறியாத வாழ்க்கையை விட்டுவிட்டு மனச் சாட்சியால் ஆளப்படும் வாழ்க்கையை நடத்துவதாகும். இறைநம்பிக்கையாளன் சத்தியத்தின் பாதையிலிருந்து வரும் எதுவாக இருந்தாலும் தன்னை அதில் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். மேலும், அவர் எந்தத் தடைகளையும் சந்திக்கும்போது அவசரத்தை நாடக் கூடாது. அவனுக்குள் ஆசை எழும்பினால் ஒடுக்க வேண்டும். மேலும் ஆணவத்தால், கைப்பற்றப்படும்போது அதை வெல்லத் தகுந்தனவாக அவன் இருக்கவேண்டும்.

தஸ்கியா என்பது சாதகமற்ற கூறுகளைத் தூய்மைப் படுத்துவதைக் குறிக்கிறது. அதனால், அவன் ஒரு சாதகமான சூழலில் பரிபூரண நிலையை அடைய முடியும். இது இறைத் தூதர்களுக்கு வழங்கப்பட்ட மிக முக்கியமான பணியாகும்.

இறைவனின் அன்பைத் தவிர மற்ற அனைவரின் அன்பிலிருந்தும் விடுபட்ட இதயங்களைக் கொண்ட மனிதர்களைத் தயார்படுத்த ஓர் இறைத்தூதர் முயற்சியை மேற்கொள்கிறார். இறைவனின்

உண்மையான விசுவாசிகளுக்கு இறைவன் ஒதுக்கியிருக்கும் பிரபஞ்சத்திலிருந்து தெய்வீக ஏற்பாட்டைப் பெறுவதற்குத் தகுதியான மற்றும் புரிந்துகொள்வதற்குச் சிக்கலான விடுபாட்டு அத்தகைய ஆன்மாக்களை இருட்டுக்குக் கொண்டு வர இறைத்தூதர் பாடுபடுகிறார். மேலும், உண்மையான நம்பிக்கையாளர்கள்தான் இறைவனால் ஒதுக்கப்பட்டிருக்கும் பிரபஞ்சத்திலுள்ள தெய்வீக ஏற்பாட்டைப் பெறுவதற்குத் தகுதியானவர்கள்.

தூய்மைப்படுத்துதல் என்பது சொர்க்கத்திற்குள் நுழைவதற்கு முக்கிய நிபந்தனையாகும். தூய்மை இல்லாமல் நிரந்தரத் தங்கும் இடமான சொர்க்கத்தில் ஒருவர் ஒருபோதும் நுழையமுடியாது.

◆◆◆

# நபிமொழி - தஸ்கியாவின் அடிப்படை

எந்தவொரு நபர் தனது இல்லத்தில் நபிமொழிகளைச் சேகரித்து வைத்திருக்கிறாரோ அவர் இறைத்தூதர் முன்னிலையில் உரையாடுவது போல் கருதுகிறார் என்று ஓர் அறிஞர் ஒருமுறை கூறினார்.

மேலே குறிப்பிட்ட கருத்து இறைத்தூதரின் மொழியைப் பற்றியது மட்டுமல்ல, இது இறைத்தூதரிடம் கொண்ட ஒரு வகையான தோழமையையும் குறிக்கிறது.

நபிமொழிகளில் பதிவு செய்யப்பட்டுள்ள இறைத்தூதரின் கூற்றுகள் எவையும் முற்றிலும் சுருக்கமான அர்த்தத்தைக் கொண்டிருக்கவில்லை. ஒவ்வொரு சொல்லும் உண்மையில் ஒரு சிறப்பான பின்னணியைக் கொண்டது. அதாவது, இறைத்தூதர் அவர்கள் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு சூழ்நிலைகளை எதிர்கொண்டார்கள். ஒவ்வொரு சூழ்நிலைக்கும் ஏற்ப, மக்களுக்கு அறிவுரைகளை வழங்கி வந்தார்கள். இவ்வகையில், இஸ்லாமிய இறைத்தூதரின் ஒவ்வொரு வாசகமும் குறிப்பிட்ட சூழ்நிலைகளுடன் தொடர்புடையவையாகும். மேலும், இறைத்தூதரின் பொன் மொழிகள் காலத்தால் பொருத்தமுடையவையாகும்.

ஒரு மனிதன் நபிமொழிகள் பற்றிய தனது புரிதலை ஆழப் படுத்தி அதன் பின்னணியைக் கருத்தில் கொண்டால் அதுவே இறைத்தூதரின் முன்னிலையில் இருப்பது போன்றாகிவிடும். ஒரு நூலில் இறைத்தூதரின் பொன்மொழிகளைப் படிப்பது மட்டுமல்லாமல் இறைத்தூதரின் வார்த்தைகளில், வரிகளுக்குள் அர்த்தத்தைப் படித்து, அதன் பின்னணியைப் பற்றி மனத் தளவில் புத்துணர்ச்சி அடைவதை அவர் புரிந்துகொள்வார். நபிமொழிகளைப் படிப்பவர் ஆர்வத்துடன் இருந்தால், அவர்

உண்மையில் இறைத்தூதரின் தோழமையை அனுபவிப்பது போல் உணருவார். இந்த வழியில் நபிமொழி பற்றிய அவரது புரிதல் பன்மடங்கு மேம்பட்டு இருக்கும்.

நாம் சிந்தித்துப் பார்த்தால் நபிமொழிகளைப் படிப்பவர்கள் வெறும் வாசகர் மட்டும் அல்ல. அவர், நபிகள் நாயகம் அவர்களின் முன்னிலையில் தோழர்களுடன் அமர்ந்து கேட்பவர் என்பது போல் உணரப்படுவார். ஹதீஸைப் படிப்பதற்கான ஆக்கபூர்வமான வழிகளில் இதுவும் ஒன்றாகும். மேலும், இந்த ஆக்கபூர்வமான முறையில் நபி அவர்களின் பாரம்பரியத்தைப் படிப்பது சந்தேகத்திற்கு இடமின்றி தூய்மைக்கான மிகப்பெரிய ஆதாரமாகும்.

◆◆◆

## தஸ்கியா : ஒரு தொடர்ச்சியான செயல்முறை

“ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நபியவர்கள் இறைவனை நினைவு கூரக்கூடியவர்களாக இருந்தார்கள்” என்று நபி அவர்களின் மனைவி ஆயிஷா அவர்கள் கூறுகிறார். (புகாரி)

இந்த நபிமொழி தஸ்கியாவிற்கான வழியைக் காட்டுகிறது. அதாவது, எல்லா சந்தர்ப்பங்களிலும் நபியவர்கள் தன்னைத் தூய்மைப்படுத்திக் கொண்டார்கள். தஸ்கியா என்பது எந்தவொரு குறுகிய பயிற்சியின் பெயரும் அல்ல. மாறாக, ஒரு தொடர்ச்சியான செயல்முறை என்பதை இது காட்டுகிறது. ஒரு நம்பிக்கையாளர் உண்மையைக் கண்டறியும் போது அவரது மனச்சாட்சியின் விழிப்புணர்வின் காரணமாக அவரது வாழ்க்கையின் ஒவ்வொரு நிகழ்வும் அனுபவமும் அவரது தூய்மைக்கான குறிப்புப் புள்ளியாக மாறும். இது தினசரி அடிப்படையில் அவருக்கு ஆன்மிக ஊட்டத்தைப் பெற உதவுகிறது. இந்த வழியில் அவரது கடைசி மூச்சு இருக்கும்வரை இந்த ஆன்மா தூய்மைப்படுத்துதல் செயல் முறை தொடர்கிறது.

உடல் ஆற்றல் நிலையான ஊட்டச்சத்தால் உருவாக்கப்படுவது போல், நிலையான தொடர் முயற்சியால் ஆன்மா தூய்மை அடைகிறது. எவ்வாறாயினும், தஸ்கியாவின் நிலையை அடைவதற்கு சுருக்கமான பயிற்சி வகுப்பு மட்டுமே தேவைப்படும் என்ற கருத்து உள்ளது. அதாவது, ஒரு குறுகியகால பரிந்துரைக்கப்பட்ட பாடப்படிப்பின் வரையறுக்கப்பட்ட சட்டத்திற்குள் ஒரு மதரஸாவின் மார்க்கக் கல்வியைப் பெறுவது போன்றது. ஆனால், உண்மை என்னவென்றால் இது தஸ்கியாவைக் குறைத்து மதிப்பிடுவதாகும்.

தஸ்கியா என்பது ஒரு ஒட்டுமொத்த செயல்முறையே அன்றி நிலையான பயிற்சியின் விளைவும் அல்ல. இதற்கு ஒரு விழித்தெழும் மனம் தேவைப்படுகிறது. இது ஒரு தடையற்ற அறிவார்ந்த செயல்முறையின் மூலம் அடையப்படுகிறதேயொழிய எந்தவொரு தற்கால படிப்பில் ஈடுபடுவதன் மூலமும் அடையப் பெறுவதில்லை.

◆◆◆

## நெறிப்படுத்தப்பட்ட மனத்திலிருந்து விடுபடல்

தஸ்கியா என்பது ஒரு தொடர்ச்சியான செயல்முறை. இது ஒவ்வொரு நாளும் தொடர்ந்து நடைபெறுகிறது. இது அவ்வாறு நடக்காதபோது, இதன் விளைவை விவரிக்கும் ஒரு நபிமொழி உள்ளது. "இரும்பு தண்ணீருடன் தொடர்புகொள்ளும்போது துருப்பிடிப்பதுபோல் இதயம் துருப்பிடிக்கிறது" என்பதுதான் அந்த நபிமொழி. நபி அவர்களிடம் ஒருவர் கேட்ட கேள்வி "இறைத்தூதர் அவர்களே! இதயத்தைத் தூய்மைப்படுத்த என்ன வழி உள்ளது?" அதற்கு, "மரணத்தை அடிக்கடி நினைவுகூர்வது, குர்ஆனை ஓதுவது" என்று பதிலளித்தார்கள்.

நபி அவர்களின் இந்த அறிவிப்பு ஓர் உளவியல் உண்மையை நமக்கு சொல்லித் தருகிறது. அதாவது, மனிதன் தான் வாழும் சமூகத்தின் சூழலில் தனக்குள் எதிர்மறை உணர்வுகளை உருவாக்குவது போன்ற அனுபவங்களை மீண்டும் மீண்டும் அனுபவித்து வருகிறான். எடுத்துக்காட்டாக கோபம், வெறுப்பு, வன்முறை, பழிவாங்குதல் போன்றவையாகும். மனிதனின் இந்த உணர்வுகளை உடனடியாகப் புதைக்க வேண்டும். ஏனென்றால், அவ்வாறு செய்யத் தவறினால் அவை மனிதனின் மனத்தில் நிரந்தரமாகத் தங்கிவிடும். மேலும், ஒரு காலம் கடந்தபின் இவற்றை அகற்றுவது என்பது கிட்டத்தட்ட சாத்தியமற்றதாக ஆகிவிடும்.

மனிதனின் மனத்தில் இரண்டு முக்கிய பகுதிகள் உள்ளன. அவற்றில் ஒன்று உணர்வுநிலை, மற்றொன்று தன்னுணர்வற்ற நிலை. அதாவது, மயக்கம் மனிதனின் உணர்வுள்ள பகுதிக்குள் முதலில் எதிர்மறை உணர்வுகள் நுழைவது என்பது மிகவும் இயற்கையானது. அத்தகைய உணர்வுகள் உடனடியாக மனத்திலிருந்து வெளியேற்றப் படாவிட்டால், அவை படிப்படியாகத் தன்னுணர்வற்ற மனத்தின் பகுதியை அடைகின்றன. அங்கிருந்து அவற்றை அகற்றுவது

மிகவும் கடினம். இதைப் பற்றி எப்போதும் விழிப்புடன் இருக்க வேண்டும். மனிதன் எல்லா நேரங்களிலும் தன் எதிர்மறையை நேர்மறையாக மாற்றிக்கொண்டே இருக்க வேண்டும். அதாவது அவன், தன்னை நெறிப்படுத்தப்பட்ட மனத்திலிருந்து விடுவித்து அதைத் தூய்மைப்படுத்தி மாசில்லாமல் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். தூய்மைப்படுத்தலுக்கான ஒரே வழி மரணத்தை மீண்டும் மீண்டும் நினைவு கொள்வதும் குர்ஆனின் ஒளியில் வாழ்க்கையின் நோக்கத்தைப் பற்றி சிந்திப்பதுமே ஆகும்.

◆◆◆

## தஸ்கியா : ஓர் ஆன்மிக ஊட்டச்சத்து

நமது உடலுக்கு உடல்சார்ந்த உணவு தேவைப்படுகிறது அந்த உணவைப் பெறும்போது, அது தன் ஊட்டச்சத்தைக் கொடுத்து உடலை ஆரோக்கியமாக வைத்திருக்கிறது. அதே போல்தான் ஆன்மாவுக்கு ஆன்மிக உணவு தேவைப்படுகிறது. ஆன்மாவுக்கு அத்தகைய உணவு வழங்கப்படும்போது அதுவும் ஆரோக்கிய மாக ஆகிறது. இந்த செயல்முறையை ஆன்மாவை பரிசுத்தப் படுத்துதல் என்றும், இந்த ஆரோக்கியமான ஆன்மா "பரிசுத்தப் படுத்தப்பட்ட மற்றும் தூய்மைப்படுத்தப்பட்ட ஆன்மா" என்றும் அழைக்கப்படுகிறது.

"ஆன்மாவிற்கு உணவு சிந்தனை செய்வது" என்று இதுபற்றி குர்ஆன் (3:191) கூறுகிறது. ஒரு மனிதன் வாழ்க்கையில் ஒவ்வொரு கணமும் சில சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. இந்தச் சம்பவங்கள் சமூகம், வரலாறு, பிரபஞ்சம் போன்றவை மட்டத்தில் தோன்றுபவையாகும். இந்நிகழ்வுகளைப் பற்றி சிந்தித்து, அதிலிருந்து படிப்பினைகளைப் பெறுவது, ஆன்மாவிற்கு உணவாக உள்ளது.

ஒரு மனிதன் தன்னைச் சுற்றி நடக்கும் நிகழ்வுகளில் இறைவனின் மகிமையைக் காணும் அளவுக்குத் தன் உணர்வை வளர்த்துக் கொள்கிறான். அதன்பின் அந்த நிகழ்வுகள் இறைவனை நினைவு கூர்வதற்கான ஒரு வழியாக மாறுகிறபொழுது, அவனுடைய ஆன்மாவுக்கு தெய்வீக உணவு கிடைத்தது எனக் கூறலாம். அவன், இறுதியாக இவ்வுலகை விட்டு இறைவனிடம் கொண்டு செல்லப்படும்வரை அவனது ஆன்மா இந்த ஆரோக்கியமான ஊட்டச்சத்தைத் தொடர்ந்து பெற்றுக்கொண்டே இருக்கும்.

தஸ்கியாவின் மிக முக்கியமான ஆதாரம், ஒவ்வொரு நிகழ்விலிருந்தும் கற்றுக்கொள்ளும் பாடங்கள் ஆகும். பாடங்களை கற்கும் திறனே தஸ்கியாவின் அடிப்படையாகும். இந்த மண்ணில் தான் தஸ்கியா வளர்கிறது. வேறு எந்த இடத்திலும் அதன் வளர்ச்சியை ஊக்கப்படுத்த முயல்வது கற்பாறையில் பச்சை மரத்தை வளர்ப்பது போன்றது எனலாம். தஸ்கியாவுக்கான ஆதாரம் தெய்வீக ஏற்பாடுதானேயன்றி, மனிதனால் வழங்கப்படுவதல்ல. இது ஓர் உளவியல் உறவின் மூலம் இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே நேரடியாக நிறுவப்பட்ட செயல்முறையின் விளைவாகும். இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையில் எந்த இடைத்தரகன் மூலமாகவும் தஸ்கியா அடைவதில்லை. ஆன்மா தூய்மைப் படுத்தல் என்பது மனிதன் இறைவனிடமிருந்து பெறும் அருட் கொடையாகும்.

◆◆◆

## இறைவழிபாட்டில் ஊகங்கள் இல்லை

மத அறிஞர் ஒருவர் ஒருமுறை நன்கு அறியப்பட்ட சூஃபி விருந்தோம்பல் நிகழ்ச்சி ஒன்றுக்குச் சென்றார். அங்கு மக்கள் உரத்த குரலில் (திக்ர் பில் ஜஹ்ர்) மற்றும் பிற சடங்குகளில் ஈடுபட்டிருப்பதைக் கண்டார். இதைக் கவனித்த அறிஞர் இறைத்தூதரின் வழிமுறையை மேற்கோள் காட்டினார்.

''நம்முடைய இந்த (மார்க்க) விஷயத்தில் இல்லாத ஒன்றை யார் புதிதாக உண்டாக்குகிறாரோ அது நிராகரிக்கப்பட்டதாகும்'' என்று அல்லாஹ்வின் தூதர் கூறினார். (புகாரி 2697) : (தொகுதி 2 ரஹ்மத் பதிப்பகம்.)

இந்த சூஃபி சடங்குகள் நபியவர்கள் மற்றும் அவரது தோழர் களின் காலத்தில் நடைமுறையில் இல்லை. எனவே இவை புதுமைகளாகக் கருதப்படும் என்று அந்த அறிஞர் கூறினார். நபிமொழியில் தடைசெய்யப்பட்டிருப்பது மார்க்கத்தில் புதுமை. இது மதத்திற்கான புதுமைகளைத் தடுக்கவில்லை என்று அந்த சூஃபி பதிலளித்தார். மேலும், வர்ணிக்கப்பட்ட அனைத்து நடைமுறைகளும் மதத்திற்கான புதுமையின் தன்மையைக் கொண்டுள்ளன.

இந்தப் பழக்க வழக்கங்களின் விளக்கம் அறிவுபூர்வமாக இல்லை. அதன் சரியான வார்த்தைகளை நாம் கருத்தில் கொண்டால் அதற்கு ஹதீஸில் எந்த அடிப்படையும் இல்லை. அதாவது, நபியவர்கள் தம் மக்களுக்குப் போதித்த, மார்க்கத்தில் சேர்க்கப்பட்டுள்ள ஒன்று அதில் இல்லாதது என வெளிப்படுத்தப்படுகிறது. அப்படியானால் பிரச்சனை முன்மொழிவை மாற்றுவது அல்ல. உண்மையான பிரச்சனை எதுவெனில், நபியவர்களிடமிருந்து நாம் பெற்ற நெறி பிந்தைய காலத்தில் சேர்த்து, இப்போது நாம் முன்வைக்கும் நெறியைக் கொண்டிருந்ததா? கொண்டிருக்கவில்லையா என்பது தான். குர்ஆன் வசனங்களை மீண்டும் மீண்டும் உரக்க ஓதுவது

போன்ற சடங்குகள் நபியவர்களால் நமக்கு வழங்கப்பட்ட நெறியின் நடைமுறையில் இல்லை என்பதுதான் நிரூபிக்கப்பட்ட உண்மை.

மத அறிஞர்கள், தங்களுடைய நிலைப்பாட்டில் - மத வழிபாட்டில் ஊகங்கள் இருக்க முடியாது என்று ஒப்புக்கொண்டுள்ளனர். அதாவது, வழிபாடு விஷயத்தில் எந்த ஊகமும் கூடாது. எந்தக் களத்திலும் எந்தவொரு அனுமானமும் வாதமும் மத நூல்களை அடிப்படையாகக் கொண்டால் மட்டுமே செல்லுபடியாகும். அதாவது, குர்ஆன் மற்றும் ஹதீஸ் அடிப்படையில் மட்டுமே யல்லாமல் வேறு எதையும் அடிப்படையாகக் கொண்ட ஊகத்தைப் பயன்படுத்துவது மதக் கண்ணோட்டத்தில் அறிவற்றது மற்றும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று.

◆◆◆

## ஒவ்வொரு கணமும் தஸ்கியா

*தஸ்கியா என்பது ஒரு தற்காலிகச் செயல் அல்லது அதை அடைய சில குறிப்பிட்ட வார்த்தைகள் அல்லது சொற்றொடர்களைக் குறிப்பிட்ட நேரத்தில் சொல்ல வேண்டும் என்று பொதுவான கருத்து உள்ளது. தஸ்கியாவிற்கு இந்தச் சடங்கு வடிவம் இயற்கைக்கு மாறானதாக இருக்கிறது. இதுபோல குறுகியகால முறைகளை நாடுவதன் மூலம் எதையும் சாதிக்க முடியாது.*

*உண்மை என்னவென்றால், ஒவ்வொரு கணமும் ஆக்ஸிஜனை உள்ளிழுப்பதைப் போல தற்காலிகமாக உள்ளிழுக்கும் வழி எதுவுமில்லை. தஸ்கியா ஒரு தொடர்ச்சியான செயல்முறையாகும். தஸ்கியா உண்மையில் ஒவ்வொரு கணத்திலும் தொடர்ந்து நடைபெறுவது. எடுத்துக்காட்டாக, ஒரு பாரசீகக் கவிஞரின் கவிதை ஒன்று இப்படிக் கூறுகிறது.*

Bar mazaar-e-ma nay cheraghe nay guley
Nay par-e-parvana raqsad
Nay sadai bulbule

*"நான் ஓர் ஏழை, என் கல்லறையில் விளக்கு இல்லை பூக்கள் இல்லை / அதனால்தான் என் கல்லறையைச் சுற்றி எந்த விட்டில் பூச்சியும் சுற்றுவதில்லை / என் கல்லறையில் புல்புல் பாடுவதில்லை."*

*ஏழையின் கல்லறையில்*
*விளக்குகள் இல்லை*
*பூக்கள் இல்லை*
*விட்டில்பூச்சிகள் படபடப்பதில்லை*
*வானம்பாடிகள் பாடுவதில்லை!*

*- ஆசாத் போரூரி (மொழிபெயர்ப்பாளர்)*

இது போன்ற ஒரு கவிதை நினைவுக்கு வரும்போது, கவிஞர் எவ்வளவு பெரும் அறியாமையில் இருக்கிறார் என்பதை நாம் முதலில் சிந்திக்க வேண்டும். அவர் தனது கல்லறையின் விளக்கையும் மலரையும் நினைக்கிறார். உண்மையான பிரச்சனை என்னவென்றால், மரணத்திற்குப் பிறகு மனிதன் வேறு உலகத்தை அடைகிறான். அவருடைய கோரிக்கைகள் அப்போது தற்போதைய உலகத்திலிருந்து வேறுபட்டவையாக இருக்கும். இங்குள்ள உலகத்திற்கு மறுஉலகில் சில உயர்ந்த குணங்கள் தேவைப்படுகின்றன. மேலும், மறு உலகில் தயாரிப்புக்கு நேரம் கொடுக்கப்படாது. இன்றைய செயலில் முடிவை மட்டுமே நாம் காண்போம். பரிகார நடவடிக்கை எடுக்க வாய்ப்புகள் இருக்காது.

இத்தகைய சிந்தனையின் விளைவு என்னவென்றால், மக்கள் மகிழ்ச்சிக்காக மட்டுமே சொல்லும் இந்தக் கவிதை தனி மனிதனுக்கு ஒரு சிறந்த பாடத்தைக் கற்பிக்கும். மறு உலகில் வெற்றியைத் தரும் அத்தகைய ஆளுமையை வளர்த்துக் கொள்ளத் தன்னைத் தயார்படுத்திக் கொள்வான். இந்த நிலை மாற்றத்துடன் அவன் தனது கல்லறையின் கதி என்னவாக இருக்கும் என்பதற்குப் பதிலாக மரணத்திற்குப் பிறகு அவன் என்ன செய்யப் போகிறான் என்ன நடக்கும் என்பதைப் பற்றி சிந்திக்கத் தொடங்குவான்.

◆◆◆

## தவறுக்குப் பின் சுயபரிசோதனை

தஸ்கியாவிற்கு முக்கிய ஆதாரம் சுயபரிசோதனை ஆகும். மனிதனின் மனத்தை சுயபரிசோதனை எழுப்புகிறது. அது மனித ஆளுமையைத் தூண்டுகிறது. அது தனி மனிதனுக்குத் தன்னைத் தானே சீர்திருத்துவதற்கான ஊக்கத்தை அளிக்கிறது. இந்த வழியாக சுயபரிசோதனை ஒருவரை அறிவுசார் மற்றும் ஆன்மிக வளர்ச்சிக்கு இட்டுச் செல்கிறது.

எடுத்துக்காட்டாக, ஒருவர் உங்களைப் புண்படுத்தும் விஷயத்தைக் கூறுகிறார். அதன் காரணமாக நீங்கள் கோபம் கொண்டு எதிர்மறையாக நடந்துகொண்டீர்கள் என்று வைத்துக் கொள்வோம். நீங்கள் பின்னர் மனம் திருந்தி சுயபரிசோதனையில் ஈடுபட்டுள்ளீர்கள். இவ்வாறு நடந்து கொள்வதன் மூலம் மரணத்திற்குப் பிந்தைய வாழ்க்கை கேடு விளைவிப்பது போன்ற எதிர்மறையான ஆளுமையை நீங்கள் வளர்த்துக் கொள்கிறீர்கள் என்ற உங்கள் மனநிலைக்கு இது வழிவகுக்கிறது. இத்தகைய எதிர்மறையான ஆளுமை உண்மையில் ஒருவரை சொர்க்கத்தில் நுழைய இயலாதவராக ஆக்கிவிடும்.

சொர்க்கவாசிகளின் கலாச்சாரம் அமைதியானதாக இருக்கும் என்பதை நீங்கள் உணர்ந்துகொள்கிறீர்கள். அன்புடனும் அமைதியுடனும் ஒன்றாக வாழும் திறன் கொண்டவர்கள் மட்டுமே அங்கு தங்கியிருப்பார்கள். ஆனால், சகிப்புத்தன்மை இல்லாத எளிதில் தூண்டிவிடக் கூடிய நேர்மையற்ற நட்பை வளர்க்கும் ஒரு மனிதர் சொர்க்கத்தில் நுழைவதற்குத் தகுதிகள் இல்லாத வராகக் கருதப்படுவார். மேலும் முடிவற்ற மகிழ்ச்சியையும் வெற்றியையும் இழக்க நேரிடும்.

அத்தகைய சிந்தனை ஒரு புரட்சியாக மாறும். மேலும் நீங்கள் உங்களுடைய சொந்தக் காவலர்களாக மாறுவீர்கள். உங்களை நீங்களே சீர்திருத்திக்கொள்வதில் மிகுந்த ஆர்வம் காட்டுவீர்கள்.

சுயபரிசோதனையின் மூலம் பிறந்த சிந்தனை தஸ்கியாவின் ஆதாரமாகும். தஸ்கியா எப்பொழுதும் வெளிப்புறச் செயல்பாடுகளால் அன்றி உள் சுயமதிப்பீட்டின் மூலமே அடைய முடியும்.

◆◆◆

## இதயம் சார்ந்த தஸ்கியா, மனம் சார்ந்த தஸ்கியா

குர்ஆனின் மூன்றாவது அத்தியாயத்தின் கடைசிப் பகுதியைப் படித்தால், அது வானங்கள் மற்றும் பூமியின் படைப்பில் உள்ள சான்றுகளைப் பற்றி சிந்திக்க வேண்டுமென்றும் அதனால் அவர்கள் தங்கள் இறைவனின் மகிமையை உணர வேண்டும் என்றும் கூறுகிறது. இந்தச் சான்றுகளின் மூலம் நீங்கள் இறைவனுடைய படைப்புத் திட்டத்தைப் பற்றி அறிந்து கொள்வீர்கள். நீங்கள் சொர்க்கத்தையும் நரகத்தையும் பற்றி தெரிந்து கொள்வீர்கள். மேலும் இறைத்தூதரின் முக்கியத்துவத்தை நீங்கள் புரிந்து கொள்வீர்கள்.

சுருக்கமாகக் கூறினால், ஆன்மா தூய்மைப்படுத்துவதின் அனைத்து விஷயங்களையும் நேரடியாகவோ மறைமுகமாகவோ நீங்கள் அறிந்து கொள்வீர்கள். குர்ஆனின் இந்த வசனங்கள் அனைத்திலும் இறைவனை உணர்தல் என்பது பிரபஞ்சத்தைப் பற்றிய சிந்தனையுடன் இணைக்கப்பட்டுள்ளது. வேறு விதமாகக் கூறினால், தஸ்கியாவென்பது குர்ஆனில் கூறியபடி மனத்தை அடிப்படையாகக் கொண்டது. இதயத்தை அடிப்படையாகக் கொண்டது அல்ல. இது சம்பந்தமாக 'இதயம்' என்ற சொல் குர்ஆன் மற்றும் ஹதீஸ் இலக்கிய அர்த்தத்தில் பயன்படுத்தப் படுகிறது. மற்றும் உடல் சார்ந்த அர்த்தத்தில் பயன்படுத்தப் படவில்லை. காலம் கடந்து, முஸ்லிம்கள் சூஃபிகளின் செல்வாக்கின் கீழ் வந்தனர். அவர்கள் இதயத்தை அடிப்படையாகக் கொண்ட தஸ்கியா எனும் கருத்தாக்கத்தை நம்பத் தொடங்கினர்.

இந்தக் கருத்தின்படி மனித இதயம் அனைத்தும் தெய்வீக உண்மைகளின் செல்வக் களஞ்சியம் என்று ஏற்றுக்கொள்ளப் பட்டது. தியானத்தின் மூலம் ஒருவர் இந்தக் களஞ்சியத்தை

அடையலாம். அதன்பின் தஸ்கியாவை அடைவார் என்று நம்பப் பட்டது. ஆனால், இதயம் சார்ந்த ஆன்மா தூய்மைப்படுத்துவது என்ற இந்தக் கருத்து குர்ஆனிலிருந்து பெறப்படவில்லை. உண்மையில் இது வரலாற்றிலிருந்து பெறப்பட்டது. இதயம் சார்ந்த ஆன்மிகத்தின் இந்தக் கருத்து பண்டைய காலத்தில் தோற்றம் கொண்டது. அதைப் பாரம்பரியமாக மக்கள் இஸ்லாத்தில் அறிமுகப்படுத்தினர்.

நவீன அறிவியல், மனத்தை அடிப்படையாகக் கொண்டது. இஸ்லாம் தஸ்கியா மீண்டும் புத்துயிர் பெறுவதற்கான அறிவியல் அடித்தளத்தை வழங்கியது. நவீன ஆராய்ச்சி மனித இதயம் ரத்த ஓட்டத்திற்கான ஒரு பம்ப் pump-ஆக மட்டுமே செயல்படுகிறது என்பதை நிரூபித்துள்ளது. இதயத்திற்கு சிந்திக்கும் திறன் இல்லை. மனது மட்டுமே சிந்திக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது. மனித செயல்கள் அனைத்தும் சிந்தனையின் மூலம் உருவாகின்றன. தஸ்கியாவிற்கான வழியும் விதிவிலக்கல்ல. ஆன்மா தூய்மைப் படுத்துதல் என்பது இதய மட்டத்தில் எந்த முயற்சியின் மூலமும் அடையப்படுவதைவிட மனத்தின் மட்டத்தில் அடையப்படுகிறது. ஆன்மா தூய்மைப்படுத்தலை அடைவதற்கு இதயத்தின்மீது கவனம் செலுத்துவது, ஒருவரின் நகங்கள் முடி அல்லது வேறு எதற்கும் கவனம் செலுத்துவதைப் போலவே பயனற்றதாக உள்ளது.

◆◆◆

## வழிகாட்டி தேவை

நபிகள் நாயகம் அவர்களின் வாழ்க்கையிலிருந்து வழிகாட்டு தலைக் கண்டறிவதற்காக கொள்கையளவில் குர்ஆனைப் பிரதிபலிப்பதும் நபிமொழியைப் படிப்பதும் மனிதனுடைய தஸ்கியாவிற்கான பாதையாகும். இது தஸ்கியாவிற்கான அடிப்படை ஆதாரமாக அதன் முக்கியத்துவம் என்றென்றும் நீடித்திருக்கும். இது தவிர, தஸ்கியாவிற்கான நடைமுறை வழியும் உள்ளது. அது ஒரு வாழ்க்கை வழிகாட்டியைக் கண்டுபிடிப்பதாகும். அவரது கற்றல் மற்றும் அனுபவத்திலிருந்து பயனடைவது. ஒரு வழிகாட்டி கிடைத்தால் அவரை நிபந்தனையின்றி ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் வழிகாட்டியை ஏற்றுக் கொள்வதற்கு முன்நிபந்தனைகளை விதிப்பது தஸ்கியாவின் பாதையில் ஒரு தடையாகவே அமைகிறது.

எவரேனும் ஒருவர் நிபந்தனையின்றி ஒரு வழிகாட்டியை ஏற்றுக்கொள்வதாகக் கூறும்பொழுது அவர் ஏதோ குருட்டு நம்பிக்கையுடன் இந்த ஏற்பாட்டிற்குள் நுழைந்தார் என்று அர்த்தமல்ல. இந்த இரண்டு மனிதர்களும் ஒரே தார்மீக நினைவினுடைய வளர்ச்சியின் விளைவாக ஒரே அலைவரிசையில் ஒன்றிணைந்துள்ளனர் என்று மட்டும் அர்த்தமாகும். இது குருட்டு நம்பிக்கைக்கு மாறாக அறிவுசார்ந்த உறவின் வழக்காகும். இரண்டு மனிதர்கள் உண்மையின் மையத்தை அடையும் போது, அவர்கள் இயல்பாகவே அறிவு சார்ந்த பொதுவான நிலைக்குள் நுழைகிறார்கள். அவர்கள், அறிவார்ந்த பொதுமையாக மாறுகிறார்கள். அவர்கள் அறிவுசார்ந்த இரட்டையர்களாகவும் மாறுகிறார்கள்.

தஸ்கியாவிற்கு ஒரு வழிகாட்டி இன்றியமையாதவர். ஆனால், வழிகாட்டியின் முக்கியத்துவம் சமய விஷயத்தைவிட நடைமுறைக்குரியதாக இருக்க வேண்டும். உண்மையில் வழிகாட்டியின்

முக்கியத்துவம் இறைவனின் பொதுவான சுன்னாவுடன் நேரடியாகத் தொடர்புடையதாகும். குர்ஆனின் பின்வரும் வசனத்தில் இந்த சுன்னாவைப் பற்றி விவரிக்கப்பட்டுள்ளது.

"(நபியே!) உம் இறைவனின் அருட்கொடையைப் பங்கீடு செய்பவர்கள் இவர்கள்தாமா? இவ்வுலக வாழ்வில் இவர்களிடையே இவர்களுக்குரிய வாழ்வாதாரத்தை நாம்தானே பங்கிட்டளிக்கிறோம். இவர்களில் சிலரைத் தகுதிகளால் உயர்த்தி, வேறு சிலரை இவர்கள் பணியாளர்களாக்கிக் கொள்ளும்படி (செய்துள்ளோம்)." (43:32).

இவ்வசனத்தின் மூலம் நாம் அறிவது என்னவெனில், வழிகாட்டிக்குத் தேவையான பண்புகளை அனைவருக்கும் வழங்குவது இறைவனின் வழியல்ல. மாறாக குறிப்பிட்ட நபர்களுக்குத் தலைமைப் பண்புகளை வழங்குவது இறைவனின் வழி. மற்றவர்கள் அவர்களைப் பின்பற்றி நடக்க வேண்டும். இதுதான் இறை வழியின்படி இயற்கையான வாழ்க்கை முறையாகும்.

ஒரு மத வழிகாட்டிக்கு வழங்கும் வழி இறைவனின் வழிகாட்டுதலுடன் நேரடியான தொடர்புடையது. ஏனெனில் இந்தப் பாத்திரத்தை நிறைவேற்ற வேண்டியவர்களுக்கு இறைவன் சிறப்பு உதவிகளை வழங்குகிறான். தஸ்கியாவைத் தேடுபவர்களின் கடமை, அவர்களை அடையாளம் கண்டு, அவர்களின் இலக்கை அடைய அவர்களிடமிருந்து வழிகாட்டுதலைப் பெறுவது ஆகும். அவ்வாறு செய்யத் தவறியவர்கள் இந்த இயற்கைச் சோதனையில் தோல்வியடைந்தவர்களாகக் கருதப்படுவார்கள்.

இதில் மர்மம் ஒன்றுமில்லை. இது அறியப்பட்ட இயற்கையான ஒன்றுதான். இதைச் சிந்தித்துப் பார்ப்பதன் மூலமும் புரிந்து கொள்ள முடியும். ஓர் ஆன்மிக வழிகாட்டியிடமிருந்து பெறப் படுவது சாதாரணமாகப் பார்த்தால் மர்மமான ஒன்று அல்ல. இது பொதுவாக, பயிற்றுவிப்பு என்றுதான் அழைப்படுகிறது. ஒரு ஆன்மிக வழிகாட்டி என்பவர் ஓர் ஆளுமையாக அல்லாமல் ஒரு வாழும் வழிகாட்டியாகவே இருக்கிறார்.

◆◆◆

## தஸ்கியாவிற்கு உரையாடலின் அவசியம்

தோழமை என்பது தஸ்கியாவிற்கு மிகவும் உதவிகரமான வழியாகும். பழங்காலங்களில் சமூக சந்திப்பு, நேருக்கு நேரான உரையாடல் தோழமைக்கான ஒரே வழியாக இருந்தது.

தற்காலத்தில் ஒருவருக்கொருவர் வெகு தொலைவில் வாழ் கிறார்கள். இதனால் தோழமை என்பது கேள்விக்குறியாக இருக்கலாம். இருப்பினும் தஸ்கியாவைத் தேடுபவர் தனது வழிகாட்டியின் தோழமையின் பலன்களை - tele-counselling - டெலி கவுன்சிலிங் மூலம் பெறுவது இன்று சாத்தியமாக இருக்கிறது. இதில் முன்பு செய்தது போல கடிதங்கள் அல்லது புத்தகங்கள் மூலம் தொடர்பு கொள்வதைவிட உடனடியாகத் தொடர்பு கொள்ள முடியும். எவரேனும் உண்மையாகவே தஸ்கியாவை நாடுவதாக இருந்தால், புதிய தகவல் தொடர்புக்கான வாயில்கள் (new channels of communication) உண்மையான தோழமைக்குச் சாத்தியமான மாற்றாகச் செயல்படும்.

இந்த நவீன தகவல் தொடர்பு சாதனங்களில் ஒன்றான அச்சு இயந்திரம், புத்தகங்கள் மற்றும் பத்திரிகைகள் போன்ற வாசிப்புப் பொருட்கள் தஸ்கியாவைக் கற்றுக்கொள்ள சாத்திய மாக்கியுள்ளன. தஸ்கியாவைத் தேடுபவர் இந்த விஷயத்தை நன்கு அறிந்திருக்க வேண்டுமானால், இவை தீவிரமாக ஆய்வு செய்யப்பட வேண்டும். குர்ஆனில் "அவன்தான் எழுதுகோல் கொண்டு (எழுதக்) கற்றுக்கொடுத்தான்." (96:4) என்னும் வசனத்தில் எழுதப்பட்ட வார்த்தையிலிருந்து அதாவது புத்தகங்கள் மூலம் உணர்வை உள்வாங்கும் இந்த முறையின் முக்கியத்துவத்தை நாம் அறிந்துகொள்கிறோம்.

ஒரு வகையில் படிப்பின் முக்கியத்துவம் தோழமையை விட குறைவாக இல்லை. புத்தகங்களைத் தொடர்ந்து படிப்பதால் உண்மையில் அந்த விஷயத்தை ஆழ்ந்து சிந்திக்க முடியும்.

புத்தகங்களைப் படிப்பது மிகுந்த பலனைத் தந்தாலும் தஸ்கியாவிற்காக உரையாடல்கள் இன்றியமையாதவையாகும். ஏனெனில், பலனளிக்கும் கருத்துப் பரிமாற்றத்தை ஏற்படுத்துகின்றன. அதாவது மத வழிகாட்டியுடன் தொடர்பு வைத்து, எல்லா விஷயங்களிலும் அவரிடமிருந்து வழிகாட்டுதலைப் பெற வேண்டும். இந்தத் தொடர்பு நேரடி சந்திப்புகள் மூலமாகவோ அல்லது பிற தகவல் தொடர்பு வழிகள் மூலமாகவோ மேற்கொள்ளப்படலாம். தினசரி அடிப்படையில் இத்தகைய தொடர்பு அவசியம். ஆனால், எப்பொழுதாவது தொடர்பு கொள்வது நம் நேரத்திற்கு உதவாது.

◆◆◆

# இடைத்தரகர் இன்றி

மக்கள் பொதுவாக அறிந்தோ அறியாமலோ தஸ்கியாவிற்கு சில மர்மமான இடைத்தரகர் தேவை என்று நினைக்கிறார்கள். கடந்த காலத்தில் இருந்த துறவிகள் அல்லது கற்றறிந்த பெரிய மனிதர்கள் அல்லது ஆன்மிகத்தில் உயர்ந்த பட்டம் பெற்ற சில மத வழிகாட்டிகள் போன்றவர்களின் தேவை வேண்டுமென மனிதர்கள் நினைத்தார்கள். இந்த மர்மமான மத்தியஸ்த கருத்தின்படி, மதவழிகாட்டி (ஷேக்) தானே இலக்காக அல்லது தன்மீது கவனம் செலுத்தச் செய்கிறார். ஆனால் இறைவன்தான் மையத்தில் இருக்க வேண்டும். ஆன்மிக, மத வழிகாட்டியின் நிலை முற்றிலும் புறநிலையாக இருக்க வேண்டும். அதாவது மத வழிகாட்டி ஒரு முடிவுக்குச் செல்ல வழியாகத்தான் இருக்க வேண்டும்.

இடைத்தரகர் அல்லது மத்தியஸ்தம் என்ற கருத்து முற்றிலும் அஸ்திவாரம் இல்லாதது ஆகும். எந்த நடுவரும் இல்லாமல் இறைவனுடனான தொடர்பு மூலம் ஆன்மா தூய்மைப்படுத்தப் படுகிறது. இந்த விஷயத்தில் எந்த மத்தியஸ்தமும் எந்த உதவியும் செய்யமுடியாது.

உண்மையான தஸ்கியா இறைவனால் அருளப்பட்டதாகும். இந்தப் பரிசை இறைவனிடமிருந்து பெற நடுவர் தேவையில்லை. எல்லா மனிதர்களுக்கும் இறைவன் நேரடியாக எங்கு வேண்டு மானாலும் அருள் புரிகிறான். நடைமுறையில் பின்பற்ற வேண்டியது என்னவென்றால், உண்மையான ஆர்வத்துடன் தஸ்கியாவை நாடுவதாகும்.

(நபியே!) என் அடியார்கள் என்னைப்பற்றி உம்மிடம் கேட்டால், "நான் மிக அருகிலேயே இருக்கிறேன். என்னை அழைப்பவருக்கு

*(அப்போதே) நான் பதிலளிக்கிறேன். எனவே, அவர்கள் என் கட்டளையை ஏற்றுக்கொள்ளட்டும்; என்மீதே நம்பிக்கை வைக்கட்டும். அதனால் அவர்கள் நேர்வழி பெறுவர்" என்று கூறுவீராக! (2:186)*

குர்ஆனின் மேற்கூறிய வசனத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள 'அருகில்' என்ற சொல் தஸ்கியாவை அடைவதற்கான வழிமுறையானது மத்தியஸ்தம் அல்லது இடைத்தரகரை நம்புவதைவிட இறைவனிடம் நெருங்கி வருவதே சிறந்தது என்பதைக் காட்டுகிறது. ஒருவர் தன்னைத் தூய்மைப்படுத்த விரும்பினால் தன் மனத்தை எழுப்பி முடிந்தவரை இறைவனிடம் நெருங்க முயற்சி செய்ய வேண்டும்.

இந்த இலக்கை அடைய எந்த மத்தியஸ்தமும் உதவாது. தஸ்கியாவை நேரடியாக இறைவனிடமிருந்து மட்டுமே பெற முடியும். தஸ்கியாவிற்கு வேறு வழி இல்லை. இடைத்தரகரின் செயலாற்றல் என்ற கருத்து தடையாகத்தான் உள்ளது. இறைவன் நெருங்கி இருக்கும்போது, மனிதனின் பிடரி நரம்பைவிட (50:16) அருகில் இருக்கும்போது ஏன் இடையில் ஒருவரின் செயலாற்றல் தேவைப்படுகிறது.

ஒரு மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையில் ஒரு மர்மமான உறவு இருக்க முடியும் என்ற கருத்திலிருந்து இடைத்தரகர் என்கிற கருத்து உருவாகிறது. அதே நேரம் ஒரு மத வழிகாட்டியின் கருத்து என்பது பின்தொடர்பவருக்கும் வழிகாட்டிக்கும் இடையே ஒரு உணர்வு மட்டத்தில் நிறுவப்பட்டுள்ளது.

◆◆◆

## தஸ்கியாவிற்கு முதலிடம்

தஸ்கியாவை அடைவதற்கான உண்மையான ஊக்கம், "நாம் ஆன்மிக வளங்கள் இன்றி இருக்கிறோம்" என்ற உணர்வுதான். ஒருவருடைய தேவையின் உணர்வை ஒருவர் எவ்வளவு அதிகமாக ஒப்புக்கொள்கிறாரோ, அவ்வளவு அதிகமாக தஸ்கியாவின் அவசியத்தை ஒருவர் உணர்கிறார். அதனால் ஆர்வம் அடைந்த ஒருவர் இயற்கையாகவே இந்தத் தேவையை நிறைவேற்ற முற்படுவார்.

இந்தக் கண்டுபிடிப்பு, ஒருவரின் சொந்த இருப்பிலிருந்து தொடங்குகிறது. மனிதன் முதலில் தன் இருப்பை உணர்ந்து கண்டுபிடிக்கிறான். இந்தக் கண்டுபிடிப்பு அவனுடைய படைப் பாளி யார் என்பதைக் குறித்த கேள்வியை எழுப்புகிறது. இவ்வாறு அவன் இறைவனைக் கண்டுபிடிக்கிறான். இந்தக் கண்டு பிடிப்பு அவனுடைய படைப்பாளியின் மகத்துவத்தைப் பற்றிய ஒரு மகத்தான உணர்வை உருவாக்குகிறது.

அவன் தனது சொந்த பலத்தால் தன் தேவை எதையும் பூர்த்தி செய்ய முடியாது என்பதைப் பிரதிபலிக்கிறான். அவனுக்குத் தேவையான அனைத்து அடிப்படைப் பொருட்களும் பூமி, நீர், ஆக்ஸிஜன் உள்ள காற்று, ஒளி, உணவு மற்றும் வாழ்க்கைக்குத் தேவை என்று அறியப்பட்ட அனைத்து பொருட்களும் ஏற்கெனவே அவனது சொந்த முயற்சி இல்லாமல் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. இல்லை, இல்லை, உண்மையில் அனைத்தும் அவனுக்கு நிபந்தனையற்ற பரிசுகளாக உள்ளன. இந்தக் கண்டுபிடிப்பிற்குப் பின்பு இந்த அருட்கொடைகள் அனைத்தையும் அளிப்பவன் யார் என்பதைப் புரிந்துகொள்ள முயற்சி செய்கிறான். இவ்வாறு சிந்தித்ததன் விளைவாக அவன் தன் இறைவனைக்

கண்டறிந்து கொள்கிறான். இதன் காரணமாகக் கொடுப்பவன் மீது அவனுக்கு மனநிறைவான அன்பு உண்டாகிறது.

அவனது தேடல், அவனுடைய இலக்கு என்ன என்ற கேள்விகள் அவனை இழுத்துச் செல்கின்றன. தற்போதைய உலகில் அவன் விரும்பிய இலக்கை அடைய முடியாது என்பதை அவன் அறிந்துகொள்கிறான். இந்தக் கண்டுபிடிப்பு இறுதியாக அவனை சொர்க்கத்தை மிகவும் விரும்பச் செய்கிறது. அங்கே அவன் தனது இலக்கை அடைவதோடு நிலையான வாழ்க்கையைப் பெறலாம்.

இதைப் போலவே, அவன் இந்தச் சிந்தனையில் மேலும் செல்லும்போது, தனது வாழ்க்கைக்கு உண்மையான வழி காட்டுதல் தேவை என்பதை அவன் கண்டுபிடிப்பான். பின்பு, அவன் எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டாலும் அத்தகைய வழிகாட்டுதலைத் தன்னால் கண்டுபிடிக்க முடியாது என்ற முடிவுக்கு வருகிறான். இந்த முடிவின் மூலம் உண்மையான வழிகாட்டுதலின் ஒரே சாத்தியமான ஆதாரம் ஓர் இறைத்தூதர் தான் என்ற யதார்த்தத்திற்கு வந்துவிடுகிறான்.

இதனால், அவன் முழு மனத்துடன் இறைத்தூதரை தனது வழிகாட்டியாக ஏற்றுக் கொள்கிறான். இந்த கண்டுபிடிப்பு களுக்குப் பிறகு, அவன் இயல்பாகவே ஒரு தன்னடக்கமுள்ள மனிதனாக மாறுகிறான். அவன் இறைவனின் மகத்துவத்தில் வாழத் தொடங்குகிறான். இறைவனின் படைப்புகள் அவனது நினைவாற்றலுக்கு நிரந்தர உந்து சக்தியாக மாறுகின்றன. அவன் இறைத்தூதரை சரியான வழிகாட்டியாக ஏற்றுக்கொள்கிறான். அவனது மிகப்பெரிய இலக்காக சொர்க்கம் மாறுகிறது. இப்படி இறைவனை உணர்ந்துகொள்வது தொடர்பான அனுபவங்களை தஸ்கியா என்று விவரிக்கலாம்.

◆◆◆

# தஸ்கியாவும் சுயபரிசோதனையும்

தஸ்கியா ஒரு தடவை மட்டும் நடத்தும் பாடமாக இல்லை. அதாவது, ஒரு பாடத்தை எடுத்து நிரந்தரமாகத் தூய்மைப் படுத்தப்பட்ட நபராக மாற முடியாது. உண்மை என்னவெனில், தூய்மைப்படுத்துதல் என்பது ஒரு தொடர்ச்சியான செயல்முறை. இது வாழ்நாள் முழுவதும் நீடிக்கும். தஸ்கியா என்பது சுய பரிசோதனையின் ஒரு செயலாகும். அதில் ஒருவர் தனது சொந்த செயல்களைக் கண்காணிக்க வேண்டும். ஆன்மா தூய்மைப்படுத்தலை விரும்பும் ஒருவர், ஒவ்வொரு நொடியிலும் தனது பேச்சு, செயல்களில் கவனமாக இருக்க வேண்டும். முழுமையான உண்மை நிலையுடன் அவன் மீண்டும் மீண்டும் சுயமதிப்பீட்டில் ஈடுபட வேண்டும். இந்த சுயபரிசோதனை செயல்முறை மனம் வருந்தி சுயபரிசோதனை செய்யும் ஒருவரிடம் மட்டுமே அமையப் பெற்றுள்ளது.

இந்த நிகழ்கால உலகம் ஒரு சோதனைக்களம். ஒவ்வொரு கணமும் சோதனைக்கு உட்படுத்தப்படும் வகையில் படைப் பாளியால் உருவாக்கப்பட்டுள்ளது. தனது சுய கோரிக்கைகளை மீண்டும் மீண்டும் எதிர்கொள்வது, ஷைத்தானின் சோதனைகள். அவனை விரும்பத்தகாத ஒன்றைச் செய்ய வழிவகுக்கச் செய்யும். மற்றும் பாதகமான சூழ்நிலைகள் மோசமான சூழலுடன் தீய தாக்கங்களுக்கு இணைந்திருக்கின்றன. இத்தகைய தோல்விகள் அனைத்தும் தஸ்கியாவிற்கு எதிராக உள்ளன.

மனிதன் இந்த விஷயத்தில் மிகவும் உணர்வுத்திறன் உடைய வனாக இருக்க வேண்டும். இதுபோன்ற சோதனையின் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவன் உடனடியாக உள்ளார்ந்த ஆபத்துகளைப் பற்றி விழிப்புடன் இருக்க வேண்டும். ஒருவன்

தன்னைத் தூய்மைப்படுத்துதலுக்குத் தன்னால் இயன்றதைச் செய்கிறான். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் மீண்டும் தூய்மைப் படுத்திக்கொள்வது ஆன்மா தூய்மைப்படுத்துதல் பணியாகும். ஆனால் சுயபரிசோதனை இல்லாமல் யாரும் தூய்மையான ஆளுமையாக மாற முடியாது. சுயபரிசோதனை அறிவார்ந்த வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது. இது தஸ்கியாவின் செயல்முறை தொடர்ந்து நடைபெறும் என்பதற்கான உத்தரவாதமாகும்.

◆◆◆

# தஸ்கியாவும் தன்னடக்கமும்

தரிசு நிலத்தில் எந்தப் பயிராலும் வளர முடியாது. அவற்றின் வளர்ச்சிக்கு சாதகமான மண் தேவைப்படுவதால் அவை வளமான நிலத்தில் வளர வேண்டியிருக்கிறது. ஆகவே, அந்த சாதகமான மண்தான் தன்னடக்கமாகும். தஸ்கியாவிற்கு அடக்கத்தின் தரம் பெரிதும் உதவுகிறது. ஆனால், ஆணவம் அதற்கு மாறாக சாதகமற்றதாக உள்ளது. ஆணவம் கொண்ட எவனும் சுய தூய்மையை அடைய ஒருபோதும் முடியாது. அடக்கத்தின் மிக முக்கியமான அம்சம் என்னவென்றால், அது தன்னிடம் ஏதோ ஒரு குறை இருப்பதாக ஒருவரை உணரச் செய்கிறது.

இந்த உணர்வின் விளைவு என்னவென்றால், உண்மை அவனுக்குத் தெளிவாகத் தெரிந்தால், அவர் அதை எந்த முன்முயற்சியும் இல்லாமல் ஏற்றுக்கொள்கிறார். அவர் அதைப் பாரபட்சமற்ற முறையில் பெறுகிறார். மேலும், இந்த உண்மை தனது குறைபாடுகளை ஈடு செய்யும் என்பதை விரைவில் கண்டுபிடிப்பார். எனவே, அவர் உண்மையைத் தனக்குச் சொந்தமானது போல் ஏற்றுக்கொள்கிறார். இந்தக் குணம் ஆன்மா தூய்மைப்படுத்தலுக்கு ஊக்கம் அல்லது சாராம்சமாகும். ஆனால், ஆணவம் கொண்டவரின் செய்கை இதற்கு முற்றிலும் எதிர்மாறானது. ஆணவக்காரனின் எண்ணம் தன்னிடம் ஏற்கெனவே எல்லாமே இருக்கின்றது. ஆகவே, யாரிடமும் எதையும் கேட்க வேண்டியது அவசியமில்லை என்று நினைப்பான். இதன் காரணமாக அவன் மற்றவர்களின் அறிவுரைகளை ஏற்க மாட்டான், அவன் சீர்திருத்தவாதியின் சொல்லும் செய்திகளைக் கேட்க மாட்டான். மாறாக, அதை நிராகரிப்பான். இந்த அணுகுமுறை தஸ்கியாவின் பாதையில் செல்வதற்குத் தடையாக அமைகிறது.

உண்மை என்னவெனில், தஸ்கியா ஒரு தொடர்ச்சியான செயல்முறையாகும். ஒரு அடக்கமான நபருக்கு மட்டுமே அது விளைவை ஏற்படுத்துகிறது. அடக்கம் ஒருவர் உண்மையை ஏற்றுக் கொள்ள உதவுகிறது. உளவியல் சிக்கல்களிலிருந்து ஒருவரை விடுவிக்கவும் செய்கிறது. ஒரு சிக்கல் இல்லாத ஆன்மா மட்டுமே, தஸ்கியாவின் இலக்கை அடைவதில் வெற்றி பெறமுடியும்.

◆◆◆

## இறைத்தூதரின் பிரார்த்தனைகள்

நபிமொழி நூல்களில் பல அறிவிப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவை இறைத்தூதர் சில நேரங்களில் சில பிரார்த்தனைகளைச் செய்ததை நமக்குக் காட்டுகின்றன. அவை பொதுவாக, "மஸ்னூன் திக்ர்" அல்லது "மஸ்னூன் துஆ" என்று அழைக்கப்படுகின்றன. பொதுவாக, இறைத்தூதரால் உச்சரிக்கப்பட்ட இந்த வார்த்தைகள் தஸ்கியாவின் மிகப் பெரிய ஆதாரம் என்று நம்பப்படுகிறது. மேலும், ஒருவர் தஸ்கியாவின் உச்சத்தை அடைய சில சந்தர்ப்பங்களில் அவற்றைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்றும் நம்பப் படுகிறது.

ஆனால், இது உண்மையல்ல; இறைத்தூதர் கூறிய இந்த வார்த்தைகள் உண்மையில் இறைத்தூதரின் உணர்வுகள் அல்லது மனநிலையின் பிரதிபலிப்பாகும். உண்மை என்னவெனில், இஸ்லாத்தின் இறைத்தூதர் அல்லது அவரது உயர்ந்த அளவிலான உணர்தலின் காரணமாக, இறைவன் பற்றிய எண்ணங்களில் தொடர்ந்து ஈடுபாடு கொண்டிருந்தார். இந்த உணர்வு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வார்த்தைகளில் வெளிப்படுகிறது. இன்று நபிமொழி நூல்களைப் படிப்பவர்களுக்கு இறைத்தூதரின் வார்த்தைகள் மட்டும் தெரியும். அவர்கள் அவரது உணர்வுகளை அல்லது மனநிலைகளை அறிந்து கொள்வதில்லை. இதனால்தான் அவர்கள் வார்த்தைகள் அனைத்தையும் ஒன்றாக எடுத்துக் கொள்கிறார்கள். இறைத்தூதரின் பிரார்த்தனைகளின் இந்தக் கருத்துக்கு ஒப்புதல் கொடுப்பது இறைத்தூதரின் வார்த்தைகளைக் குறைத்து மதிப்பிடுவதாகும்.

இறைத்தூதரின் பிரார்த்தனை என்பது உண்மையில் ஒருவரின் நனவை எழுப்புவதாகும். அப்படித் தொடங்கப்பட்ட

தொடர்ச்சியான சிந்தனைச் செயல்பாட்டின் மூலம் மட்டுமே நாம் இறைவனின் எண்ணங்களில் வாழும் ஓர் ஆளுமையை உருவாக்க முடியும். இறைத்தூதரின் பிரார்த்தனைகளிலிருந்து கற்றுக்கொள்வதற்கு இதுவே முதல் முன்நிபந்தனையாகும். இதற்குப் பிறகு, ஆன்மிக ஆளுமையின் வளர்ச்சியைப் பொறுத்த வரை, அவர்கள் சொன்ன பிரார்த்தனை வார்த்தைகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும். இந்தத் தயாரிப்பு இல்லாமல் இறைத்தூதரின் வார்த்தைகளை உண்மையான அர்த்தத்தில் பின்பற்றாமல் இறைத்தூதரின் வார்த்தைகளைத் திரும்பத் திரும்பச் சொல்வது வெறுமனே திருப்பிச் சொல்வதைப் போலவே தவிர, வேறு ஒன்றும் இல்லை. அறிந்தோ அறியாமலோ இறைத்தூதரின் பிரார்த்தனைகளைப் புனிதமான வார்த்தைகளால் மர்மமான குணங்களைக் கொண்டதாகக் கருதிக் கொள்கின்றனர்.

வெறும் வார்த்தைகளாக இல்லாமல் இறைத்தூதரின் பிரார்த்தனைகள் அவருடைய மனநிலையைப் பற்றி நமக்குச் சொல்கின்றன என்பதே உண்மை.

◆◆◆

# தஸ்கியாவும் பிரார்த்தனையும்

*பிரார்த்தனை என்றால் என்ன? உதவி கிடைக்காத ஒரு மனிதன் சர்வ வல்லமைகொண்ட இறைவனைக் கண்டறிந்த பிறகு உருவாகும் உணர்வை வார்த்தைகளில் வெளிப்படுத்துவதுதான் பிரார்த்தனை ஆகும். இறைத்தூதரின் பிரார்த்தனைகளுமேகூட எல்லாம் வல்ல இறைவனுக்கான இந்த உணர்வுகளின் வெளிப் பாடுதான். இறைத்தூதர் பல்வேறு சந்தர்ப்பங்களில் கூறிய வார்த்தைகளின் தொகுப்பிற்கு மட்டுமே பிரார்த்தனை என்று பெயர் அல்ல. இறைத்தூதரின் பிரார்த்தனைகள் உண்மையில் ஆன்மிகக் கண்டறிதலாக இருக்கின்றன. குறிப்பிட்ட வார்த்தை களை வெறுமனே உச்சரித்துக் கொண்டிருப்பதிலிருந்து வெகு தொலைவில் உள்ளன.*

*(இறைவன் இவ்வாறு கூறுகிறான் என இறைத்தூதர் கூறும் நபிமொழியான) ஹதீஸ்-எ-குத்ஸியின்படி "நான் (இறைவன்) என் வேலைக்காரனின் எதிர்ப்பார்ப்புகளுடன் இருக்கிறேன். எனவே அவன் என்னை (இறைவனை) பற்றி நல்ல எதிர்பார்ப்பு களைக் கொண்டிருக்க வேண்டும் என்று கூறுகிறார். "இந்த நம்பிக்கை அல்லது எதிர்பார்ப்பு என்றால் என்ன? இறைவனின் பண்புகளிலிருந்து ஏதேனுமொரு பண்பை மனிதன் கண்டறி வதுடன் இந்தக் கண்டறிதலின் அடிப்படையில் இறைவனிடம் நல்ல எதிர்பார்ப்புகளுடன் அதாவது, மனிதன் இறைவனிடமிருந்து நன்மையைத் தேடுகிறான். எடுத்துக்காட்டாக குர்ஆன் கூறுகிறது :*

*"நீங்கள் அவனிடம் கேட்டவை அனைத்தையும் அவன் உங்களுக்கு வழங்கினான்". (14:34)*

*இறைவனின் அருட்கொடைகளைப் பெறக்கூடிய மனிதனைப் பற்றி இந்த வசனம் ஒரு குறிப்பை வழங்குகிறது :*

“இறைவா! இந்த உலக வாழ்க்கையில் என் தேவைகளைப் பற்றி நான் அறிந்திருக்கவில்லை. அவற்றை நான் உன்னிடமே கேட்டிருக்க வேண்டும். எனது உலக வாழ்வில் எனது தேவைகள் அனைத்தையும் பூர்த்திசெய்ய நீ முன்னரே ஏற்பாடு செய்து வைத்திருந்தால் இப்போது மறுமை வாழ்வில் எனக்குத் தேவையான அனைத்து பொருட்களையும் எனக்கு வழங்குமாறு உன்னிடம் இறைஞ்சுகிறேன்.”

இந்த வகையான பிரார்த்தனை எப்போதும், ஒரு பெரிய உளவியல் கொந்தளிப்பிற்குப் பின்பே ஒருவரின் உதடுகளுக்கு வருகிறது. இந்த உளவியல் புயலின் மற்றொரு பெயர்தான் தஸ்கியா. அதாவது, ஆன்மாவைத் தூய்மைப்படுத்துவதாகும். தஸ்கியாவும் பிரார்த்தனையும் ஒன்றையொன்று சார்ந்தவை ஆகும். தஸ்கியா எப்போதும் துஆவுடன் தொடர்ந்து வரும்.

இறைவனிடம் பிரார்த்தனை (துஆ) செய்வது தஸ்கியாவின் செயல்முறையாகும். தஸ்கியா இல்லாமல் பிரார்த்தனை இல்லை. அதே போல் பிரார்த்தனை இல்லாமல் தஸ்கியா இல்லை. இவை இரண்டும் ஒன்றை ஒன்று சார்ந்தவை ஆகும்.

◆◆◆

# தஸ்கியாவின் வடிவம்

தஸ்கியாவிற்குப் புறவயமான வடிவம் ஒன்றுமில்லை. தஸ்கியா விற்குப் புறவயமான வடிவம் இருந்திருந்தால் அந்த வடிவத்தைக் பின்பற்றுவதாகும். உணர்ந்தோ அல்லது உணராமலோ தஸ்கியாவை முழுமைப்படுத்திவிட்டதாக மனிதன் நினைப்பான். இவ்வாறு அவன் திருப்தி அடைவான். ஆனால், இந்த விஷயத்தில் மனநிறைவான உணர்வு மிகவும் தீங்கு விளைவிக்கக்கூடியது. தஸ்கியாவிற்கு ஒரு குறிப்பிட்ட போதாமை உணர்வைக் கொண்டிருக்கவேண்டியது அவசியம். அத்தகைய உணர்வு ஒருவரைத் தொடர்ந்து தஸ்கியாவிற்கு உட்படுத்த வைக்கிறது. அதே சமயம், மனநிறைவின் எந்த உணர்வும் இடைவிடாத முயற்சிகளைச் செய்வதற்கான ஊக்கத்தைத் தருகிறது.

தஸ்கியாவும் இஸ்லாமிய வழிபாட்டுமுறையும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. இரண்டையும் பிரிக்க முடியாது. ஒருவர் ஆன்மா தூய்மைப்படுத்துதல் செயல்முறையை முடித்துவிட்டார். எனவே, இஸ்லாம் விதித்துள்ள வணக்க வழிபாடுகளை இனி செய்ய வேண்டியதில்லை என்று யாரும் கூறமுடியாது.

ஆனால், தஸ்கியாவின் நோக்கத்தை அடைவதற்கு வழிபாடு களைப் புறவயமாக நிறைவேற்றிவிடுவது போதுமானது என்று இதற்குப் பொருளில்லை. இதன் சரியான நிலை என்னவென்றால், வழிபாடு என்பது தஸ்கியாவுடைய சாராம்சத்தின் வெளிப் பாடாகும். தஸ்கியாவின் ஊக்கம் ஒருவருக்குள் உண்டாக்கப் பட்டால், உண்மையான அர்த்தத்தில் ஒருவர் இறைவனின் வழிபாட்டாளராக மாறிவிடுவான்.

தஸ்கியாவிலிருந்து வணக்க வழிபாடுகளைப் பிரிக்க முடியாது. ஆனால், வழிபாட்டின் புறவடிவத்திற்குப் பதிலாக தஸ்கியாவின் ஆன்மாவிற்கு முழுமையான முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். வணக்க வழிபாடு இல்லாமல் தஸ்கியாவை அடைந்து விட்டதாகக் கூறுவது தவறானது. ஆனால் புறவழிபாட்டு முறை யானது தஸ்கியாவின் உணர்வைத் தானாக உருவாக்கிவிடாது என்பதும் உண்மையே.

◆◆◆

## மனச்சாட்சி தஸ்கியாவிற்கு ஒரு வழிகாட்டி

*மனிதனுக்கு மனச்சாட்சி எனப்படும் இயற்கையான ஆசிரியர் உண்டு. அது தெய்வீக ஆசிரியராகவும் தஸ்கியாவிற்கான வழி காட்டியாகவும் செயல்படுகிறது. மனசாட்சி மனிதனை எல்லா சந்தர்ப்பங்களிலும் வழிநடத்துகிறது. அது மௌன மொழியில் 'இதைச் செய், அதைச் செய்யாதே' என்பது தஸ்கியாவிற்கு இணக்கமாக உள்ளது. அது தஸ்கியாவிற்கு எதிரானது. இந்த நடத்தைத் தூய்மையான ஆளுமையை வளர்க்க உதவும்; அந்த நடத்தை உங்கள் ஆளுமையைக் கெடுக்கும் என அறிவுரை கூறும்.*

*ஆனால், பெரும்பாலான மக்கள் மனச்சாட்சியை வழிகாட்டி யாகச் செயல்பட அனுமதிக்கவில்லை என்பதை அனுபவம் நமக்கு எடுத்துக்காட்டுகிறது. இதற்குக் காரணம் என்ன? இதன் காரணம் ஒவ்வொருவருக்கும் மனச்சாட்சிக்கு நேர்மாறான மற்றொரு திறன் கொடுக்கப்பட்டுள்ளது. அதுதான் 'நான்' என்ற அகங்காரம். மனிதன் பெரும்பாலும் தன் சொந்த அல்லது ஷைத்தானின் செல்வாக்கின்கீழ் வருகிறான். அவன் தன் மனச்சாட்சியைத் தனக்காக வேலை செய்ய விடுவதில்லை. மனச்சாட்சியின் குரல் எல்லா சந்தர்ப்பங்களிலும் கேட்கப்படுகிறது. ஆனால், நான் என்ற அகங்காரம் அந்தக் குரலை அடக்கி அதை செயலற்றதாக ஆக்குகிறது.*

*தஸ்கியாவில் ஈடுபட்டிருக்கும் நபர் இந்த எதார்த்தத்தை அறிந்துகொள்வது அவசியம். இதனால் அவர் தனது சிந்தனைச் சக்தியை எழுப்புகிறார். எல்லா சந்தர்ப்பங்களிலும் தனது அகங்காரத்தை அழிக்கிறார். ஒருவரால் அகங்காரத்தை வெல்ல முடிந்த தருணத்தில் அவருடைய மனச்சாட்சியால் அதன் இயல்பான பாத்திரத்தை வகிக்கமுடியும். மேலும், ஒருவரால் எந்த விலகலும் இல்லாமல் தஸ்கியாவின் பாதையில் பயணிக்க முடியும்.*

ஒருவரின் அகங்காரத்தை நீக்குவது அல்லது பூஜ்ஜியமாகக் குறைப்பது என்பது ஒரு தீர்க்கமான பாத்திரத்தை வகிக்கிறது. ஆனால், இந்தப் பணியை யாராலும் இன்னொருவருக்குச் செய்து கொடுக்க முடியாது. ஒருவர் அதைத் தாமாகவே செய்ய வேண்டும். ஒருவரின் அகங்காரம் விழிக்கும் தருணத்தில் அவர் உடனே விழித்துக்கொண்டு, சிந்தனையின் ஆற்றலைப் பயன்படுத்தி தன்னுடைய அகங்காரத்தை பூஜ்ஜிய நிலைக்குக் கொண்டு வந்துவிட வேண்டும்.

◆◆◆

# ஆன்மா தூய்மைப்படுத்துதலின் முறை

தஸ்கியாவிற்கான முறைகளை விவரிக்க இதுவரை பல வகையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், இந்த முறைகளின் ஒரு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. ஆனால், உண்மை என்னவென்றால், தஸ்கியாவின் முறைக்கு என்று எந்தப் பட்டியலும் இல்லை. ஏனென்றால் எந்தப் பட்டியல் தயாரிக்கப்பட்டு அது எவ்வளவு நீளமாக இருந்தாலும் முழுமை யடையாது. எந்தப் பட்டியலாலும் தஸ்கியாவின் அனைத்து முறைகளையும் உள்ளடக்க முடியாது. மேலும் நீண்ட பட்டியலும் முழுமையானது அல்ல என்பதைப் பிற்கால அனுபவங்கள் நிரூபித்துவிடும்.

உண்மையில் தஸ்கியா என்பது ஒரு பட்டியலும் தொடர்பில்லை. மாறாக, அது மனிதனின் சொந்த விருப்பம் மற்றும் நோக்கத்தின் விளைபொருள் என்பதுதான் உண்மை. மனிதன் நிஜமாக தஸ்கியாவில் தீவிரமாக இருந்தால் அதை நேர்மையான முறையில் அடைய விரும்பினால், அவன் நிச்சயமாக வெற்றி பெறுவான். ஆனால், மனிதன் அதைப் பற்றி தீவிரமாகச் செயல்படவில்லை. அதை அடைவதில் ஆர்வம் காட்டவில்லை என்றால் அவனது அகத்தூய்மைக்கு எழுத்துகளோ பேச்சுகளோ போதாது.

மனிதன் தான் செய்யும் ஒவ்வொரு தவறுக்கும் நியாயம் காண்பது அவனது தனித்துவ குணமாகும். தன்னுடைய தவறுகளை நற்பண்புகளாகவும் தவறுகளைச் சரியான செயல்களாகவும் சித்திரிக்க அழகான வார்த்தைகளைப் பெற்றுக்கொள்கிறான். இந்நிலையில், எந்த சீர்திருத்தவாதியாலும் நலம் விரும்பியாலும் இந்த மாதிரியான நபருக்கு தஸ்கியாவைக் கொண்டுவர இயலாது. தஸ்கியாவிற்கு ஒருவர் தன்னைப் பற்றி உணர்வுபூர்வமான முடிவை

எடுக்க வேண்டும். அந்த முடிவு மிகவும் உறுதியானதாக இருக்க வேண்டும். அதில் ஒருவர் நிலையாக இருக்க வேண்டும். அதைத் தவிர்க்க எந்தக் காரணமும் இருக்கக் கூடாது.

தஸ்கியாவிற்குத் தேவையானது மன உறுதி. இது மிகவும் உறுதியுள்ளதாக இருக்க வேண்டும். இது எந்த சலனத்தினாலும் உலக நலன்களுக்குச் சேதம் விளையும் என்ற பயத்தாலும் பாதிக்கப் படக் கூடாது.

எவ்வித அழுத்தத்திற்கும் மனவுறுதியுடன் எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும். தன்னைத் தூய்மைப்படுத்திக் கொள்வதை நோக்க மாகக் கொண்ட ஒருவர் மார்க்கம் எதைச் செய்யச் சொல்கிறதோ அதைச் செய்யத் தயாராக இருக்க வேண்டும். அதற்காக, நடை முறையிலும் மற்றும் உளவியல் மட்டத்திலும் என்ன விலை கொடுத்தாலும் சரியே.

◆◆◆

## தஸ்கியாவிற்கு மிகவும் பயனுள்ள வழிகள்

*தஸ்கியாவிற்கான ஒரு வழி என்னவென்றால் சில நியதிகளைச் சுருக்கமான முறையில் உருவாக்கி, அவற்றை எழுத்துபூர்வமாக ஆக்கி, மற்றவர்களை அதைப் படிக்கச் சொல்வது. இது தஸ்கியாவிற்கான வழியாக இருக்கலாம். ஆனால், அந்த நியதிகளை சில சூழ்நிலைகளுடன் தொடர்புபடுத்துவதே மிகவும் பயனுள்ள வழி. இந்த இரண்டாவது வழியின் ஒரு வடிவத்திற்கு உயிருள்ள ஆன்மிக வழிகாட்டி தேவை. அவ்வாறான அனுபவத்திலும் கவனிப்பாலும் தஸ்கியாவிற்கான கூறுகளைத் தானே கண்டறியும் அளவிற்கு ஒருவர் தனது சிந்தனைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும்.*

*“நபியவர்கள் பறவை இறக்கைகளை விரித்துக் காற்றில் பறந்து செல்வதைக் கண்டாலும்கூட, இறைவனை உணர்ந்து கொள்வதற்கான ஏதேனுமொரு பாடத்தைக் கொடுப்பவர்களாக இருந்தார்கள்” தபகாத் இப்னு ஸஅத் (2354) என்ற நபித்தோழர் அபுதர் அல்கஃப்பாரி கூறினார்.*

*தஸ்கியாவிற்கான சில சூழ்நிலைகளைக் குறிப்பிட்டு கல்வி கற்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும். ஆன்மா தூய்மைப் படுத்துதலைத் திறம்படச் செய்வதற்கு உண்மையில் தனித்த முறை எதுவும் இல்லை. ஆன்மிகப் பாடத்தைக் கற்கும் திறமையை மனிதன் உருவாக்கிக்கொள்வதுதான். (குர்ஆன் 15:75)*

*ஒருவர் எதிர்கொள்ளும் சூழ்நிலையை தஸ்கியாவுடன் தொடர்பு படுத்தி, அதிலிருந்து ஆன்மிகப் பாடத்தைக் கற்றுக் கொள்ள லாம். அன்றாட அனுபவங்களில் நம்மிடம் தஸ்கியாவுக்கான விஷயங்கள் இருக்கின்றன. இந்த நிலைப்பாட்டிலிருந்து தினசரி அனுபவங்களைப் பார்க்கக் கற்றுக்கொள்ளுங்கள். பிறகு, ஒவ்வொரு அனுபவமும் ஒவ்வொரு கவனிப்பும் உங்களுக்கு தஸ்கியாவுக்கான ஒரு படிக்கல்லாக மாறும்.*

◆◆◆

## தஸ்கியாவிற்கான வழிமுறைகள் என்ன?

ஆன்மா தூய்மை அடைவதற்கு சில விஷயங்கள் பாரம்பரிய மான வழிமுறைகளாகக் கருதப்படுகின்றன. அதாவது மேலான தொழுகைகள் குர்ஆன் ஓதுதல், தூதுத்துவப் பிரார்த்தனைகள், தியானம், தோழமை, மார்க்க ஞானிகள் ஆகியோரின் வாழ்க்கை யிலிருந்து பாடம் கற்றுக்கொள்ளுதல் போன்றவையாகும். இந்தச் சிந்தனையின்படி தஸ்கியாவிற்கான நிலையான படிப்பு அல்லது கையேட்டிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய ஒன்று. இருப்பினும் உண்மை என்னவென்றால், ஆன்மா தூய்மை அடைவதற்கு நிலையான படிப்பு எதுவும் இல்லை. தஸ்கியாவை ஓர் உயிருள்ள செயல்பாட்டின் மூலம் மட்டுமே அடைய முடியும். மனிதன் இறைவனின் அடையாளங்களைப் பற்றி சிந்தித்து, அவனது சிந்தனைகளைச் செயல்படுத்தித் தொடர்ச்சியான சிந்தனை அல்லது பிரதிபலிப்பு மூலம் விஷயங்களின் ஆழமான உண்மைகளைக் கண்டறிவதே தஸ்கியாவின் நோக்கத்தை அடைவதற்கான உண்மையான வழிமுறையாகும். இது ஆன்மா தூய்மைப்படுத்துதலை நாடுபவருக்கு ஆன்மிக உணவாகும். எடுத்துக்காட்டாக, நீங்கள் ஒரு பறவையைப் பார்க்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். சொர்க்கவாசிகளின் இதயங்கள் பறவைகளின் இதயங்களைப் போல இருக்கும் என்ற இறைத் தூதரின் இந்த வார்த்தை உங்களுக்கு நினைவுக்கு வருகிறது.

பிறகு, உங்களைக் குறித்து நீங்கள் பின்னர் சிந்திக்கத் தொடங்கு கிறீர்கள். உங்கள் இதயம் பறவையைப் போன்றதா இல்லையா? உங்கள் இதயம் பறவையைப் போன்ற எதிர்மறை எண்ணங்களி லிருந்து விடுபட்டிருக்கிறீர்கள் இல்லையா? நீங்கள் பறவையைப் போலவே பேராசையிலிருந்து விடுபட்டாலும் விடுபடா விட்டாலும் பறவையைப் போலவே இயற்கையின் விதியைப்

பின்பற்றினாலும் இல்லாவிட்டாலும் பறவை போல் பாதிப்பில்லாதவர்களாக இருக்கிறீர்கள் இல்லையா? இத்தகைய தஸ்கியாவிற்கான சாராம்சம் தஸ்கியாவைச் சுயபரிசோதனை இல்லாமல் யாரும் அடைய முடியாது.

தஸ்கியா என்பது உண்மையில் ஒருவர் தனது சுயசிந்தனையை ஆன்மிகரீதியில் வளர்த்துக்கொள்ளும் ஒரு செயலாகும். ஒருவர் தன்னைத் தூய்மைப்படுத்திக் கொள்வதில் தனது சொந்த ஆசிரியராகி, தன்னைத் தூய்மைப்படுத்திக்கொள்ள வேண்டும். தஸ்கியாவை விரும்புபவருக்கும் ஒருவருடைய சகவாசமும் பிரசங்கமும் மட்டுமே பயன் அளிக்காது. ஆரம்ப வழிகாட்டுதல் மற்றொருவரால் வழங்கப்படலாம். ஆனால், நீங்கள்தான் செய்து முடிக்க வேண்டும். தஸ்கியாவை அடைவதற்கு மற்றவரின் பங்கு 1% எனில் சொந்தப் பங்கு 99% என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

◆◆◆

## தஸ்கியா : அறிவுசார் வளர்ச்சியின் ஆதாரம்

தஸ்கியா என்றால் தூய்மைப்படுத்துதல் என்று பொருள். அதன் விரிவான அர்த்தத்தில் வளர்ச்சி என்று பொருள். இந்த வகையில் தஸ்கியா என்பதை அறிவுசார் வளர்ச்சி எனலாம்.

மனம் என்பது தேங்கி நிற்கும் ஒன்றல்ல. அது மரத்தைப் போல வளர்ந்துகொண்டே இருக்கும் ஒன்று. அது எப்பொழுதும் வளர்ந்து வரும் ஒரு மரத்தைப் போல இருக்கிறது. இந்த செயல்முறையே அவர்களின் "நம்பிக்கையை மேலும் அதிகப்படுத்துதல்" என்று குர்ஆன் கூறுகிறது. (48:4)

நம்பிக்கையுடன் நம்பிக்கை சேர்ப்பது என்பது உணர்வு நிலையின் வளர்ச்சியாகும். இது அறிவுசார் வளர்ச்சிக்கு மற்றொரு பெயர் ஆகும். உண்மையான நம்பிக்கை என்பது தேக்கமடையாமல் இறைவனைப் பற்றிய நம்பிக்கையில் தொடர்ந்து வளர்வதாகும்.

தஸ்கியா அல்லது அறிவுசார் வளர்ச்சி எவ்வாறு நிகழ்கிறது? இதற்கு சிந்தனைதான் பாதை என்பது ஒரு தொடர்ச்சியான செயல்முறையாகும். குர்ஆன் ஹதீஸ் மற்றும் இறைத்தூதர் களின் வாழ்க்கை - தோழர்களின் வாழ்க்கை பல்வேறு மனித ஒழுக்கங்கள் பிரபஞ்சம், பூமி மற்றும் வானங்கள் பற்றிய சிந்தனை தவிர, விவாதங்களின் போது நடக்கும் சிந்தனைகளும் அடங்கும். இந்தச் சிந்தனைகள் செயல்பாட்டில் புதிய யோசனைகளை வெளிப்படுத்துகின்றன. இதன் மூலம் ஆழமான அர்த்தம் வெளிச் சத்திற்கு வரும் மற்றும் பல்வேறு நிகழ்வுகள், இதுவரை ஆராயப் படாத புதிய அம்சங்கள் ஆகியவை கண்டறியப் படுகின்றன.

உண்மையான நம்பிக்கை கொண்ட ஒருவருக்கு ஒவ்வொரு ஆய்வும் கவனிப்பும் தெய்வீகக் கண்டுபிடிப்பிற்கான வழிமுறையாக

மாறும். ஒவ்வொரு அனுபவமும் அவரை இறைவனுக்கு நெருக்கமாகக் கொண்டுவரும். ஆரம்பத்தில் அவரது நம்பிக்கை ஒரு விதை வடிவத்தில் இருந்தால் அது வளர்ந்துகொண்டே இருக்கும். மற்றும் முழுமையாக வளர்ந்த மரத்தின் வடிவத்தை எடுத்துக் கொள்ளும் தஸ்கியா என்பது இந்த அறிவுசார் மற்றும் ஆன்மிக செயல்முறைக்கான இஸ்லாமிய பெயர் ஆகும்.

நம்பிக்கை நம்மை ஆரம்பத்தில் இஸ்லாத்தின் மடியில் கொண்டு வருகிறது. பின்பு தஸ்கியா இந்த நம்பிக்கையின் வளர்ச்சிக்கு உதவுகிறது.

◆◆◆

## தஸ்கியாவும் கல்வியும்

தஸ்கியா முறையின் ஒரு பார்வை என்னவெனில், உணர்தல் நிலையை அடைந்த ஒரு சூஃபியின் நட்பு அவசியம் என்பதாகும். ஏனென்றால், அத்தகைய நபரின் ஒரு பார்வை மனித உள்ளத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த போதுமானதாகக் கருதப்படுகிறது. ஆனால், இந்தக் கண்ணோட்டத்தை குர்ஆன், ஹதீஸ் மூலம் உறுதிப்படுத்த முடியாது. குர்ஆன் மற்றும் ஹதீஸ்களின்படி தஸ்கியாவை மனிதனின் சிந்தனை மற்றும் உள்நோக்கத்தால் மட்டுமே அடைய முடியும். ஒருவர் சரியான சிந்தனையை வளர்த்துக்கொண்டால், தொடர்புடைய புத்தகங்களைப் படிப்பதன் மூலமும் இயற்கையைக் கவனிப்பதன் மூலமும் ஒருவர் தனது ஆளுமையைத் தூய்மைப்படுத்துதலுக்கு உதவும். பாடங்களைப் பெறுவார்.

"இவ்வாறே மனிதர்களிலும் பிற உயிரிகளிலும் கால்நடைகளிலும் பல நிறங்கள் காணப்படுகின்றன. (உறுதியாக) அல்லாஹ்வின் அடியார்களில் (அவனுடைய படைப்பருமையைச் சிந்தித்துணரும்) அறிவுடையோர்தாம் அவனுக்கு அஞ்சுகின்றனர்" என்று குர்ஆன் மலைகளைப் பற்றி(யும்) குறிப்பிடுகிறது. அதில் பல்வேறு நிழல்கள், கோடுகள் உள்ளன என்றும் பின்னர், அந்த வசனம் அவனுடைய அடியார்களில் அறிவுடையோர்கள் மட்டுமே அஞ்சுகிறார்கள் என்று கூறுகிறது.

இந்த வசனம் மலைகள் அல்லது இயற்கை நிகழ்வுகள் பற்றிய அறிவு மனிதனுக்கு இறைவனின் பயத்தை ஏற்படுத்திக் காட்டுகிறது. அதாவது, பயத்தின் ஆதாரம் கற்றல், ஒருவன் எவ்வளவு அதிகமாகக் கற்றுக் கொள்கிறானோ அவ்வளவு அதிகமாக இறைவனின் படைப்பில் உள்ள ஞானத்தைப் புரிந்துகொள்ள முடியும்.

கல்வி மனிதனின் சிந்திக்கும் திறனை அதிகரிக்கச் செய்கிறது. மனிதன் தன் ஆழ்ந்த மட்டத்தில் உள்ள விஷயங்களிலிருந்து உணர்தல் என்ற உணவைப் பெறுவதற்குப் படிப்பு உதவுகிறது. எடுத்துக்காட்டாக, ஒவ்வொருவரும் காற்று வழங்கும் ஆக்ஸிஜனை சுவாசிக்கிறார்கள். இதனால் ஒவ்வொருவரும் இறைவனுக்கு நன்றி செலுத்துவது சாத்தியமாக இருக்கிறது. இருப்பினும் சுவாச அமைப்பு பற்றிய நவீன கண்டுபிடிப்புகள் பற்றி அறிந்த ஒரு நபர், ஆயிரம் மடங்கு நன்றியுள்ளவராக இருப்பார். மேலும் இந்தக் கண்டுபிடிப்புகளைப் பற்றி அறியாத ஒருவரைவிட, அவரது தஸ்கியா மிகவும் பெரிய அளவில் வளரும்.

உண்மை என்னவென்றால், அறிவு ஒருவரது தஸ்கியாவை வளர்ப்பதற்கான பரந்த கட்டமைப்பை வழங்குகிறது. இது அறிவுக்கு ஆர்வத்தைத் தூண்டுவது போன்றது. இதனால் ஒருவர் ஆன்மா தூய்மைப்படுத்துதலை அதிகரிப்பதற்கான புதிய அம்சங் களைக் கண்டுபிடிப்பார்.

◆◆◆

## கவனச் சிதறல்களிலிருந்து காப்பாற்றிக்கொள்ளுங்கள்

இவ்வுலகில் வெற்றியின் ஒரு கொள்கை ஒன்றை மற்றொன்றுக்கு ஆதரவாகக் கைவிடுவதாக உள்ளது.

மனிதன் ஒரே நேரத்தில் இரண்டு விஷயங்களில் கவனம் செலுத்த முடியாது என்பது மனித உளவியல். ஒரே நேரத்தில் இரண்டு விஷயங்களில் கவனம் செலுத்தினால், அவன் மனம் ஒரு விஷயத்திலிருந்து மற்றொன்றில் திசை திருப்பப்படும். இதே கொள்கை தஸ்கியாவிற்கும் பொருந்தும். மேலும், அகத் தூய்மை செய்ய விரும்புபவர் தஸ்கியாவிற்குச் சம்பந்தமில்லாத அனைத்தையும் முற்றிலும் கைவிட வேண்டும்.

தஸ்கியாவின் பாதையில் மிகப்பெரிய தடையாக இருப்பது கவனச் சிதறலே. தஸ்கியாவைத் தேடுபவர், அதை தனது உச்சக் குறிக்கோளாகக் கொள்வது அவசியம். கவனச் சிதறல் தொடர்பான எல்லா விஷயங்களிலிருந்தும் தம்மை விலக்கிக் கொள்ள வேண்டும். தஸ்கியாவிற்கு கவனம் செலுத்துவது இன்றியமையாததாக இருக்கிறது. உளக்குவிப்பு இல்லாதவர்கள் நிச்சயமாக ஆன்மா தூய்மை அடைவதில் மிகவும் பின்தங்கி விடுவார்கள்.

எல்லாவற்றிற்கும் அதற்கான விலை இருப்பதைப் போலவே தஸ்கியாவிற்கான விலையும் உண்டு. அந்த விலையானது அனைத்து வகையிலான கவனச் சிதறல்களிலிருந்தும் தன்னைத் தானே விலக்கிக்கொள்வதாகும். எடுத்துகாட்டாக குடும்ப நிகழ்ச்சிகள், நட்பு, பண்பாடு, உணவு, உடை, புகழ் செல்வத்திற்கான ஏக்கம் மற்றும் வாழ்க்கையில் ஏற்படும் பிற சோதனைகள் முதலியவை.

தஸ்கியாவில் ஈடுபடுபவருக்கு இது போன்றவை அனைத்தும் கவனத்தைச் சிதறடிக்கும் வீணான விஷயங்களே. தன்னைத்

தூய்மைப்படுத்திக்கொள்ள விரும்பும் எவரும் இதுபோன்ற எல்லாவற்றிலிருந்தும் முற்றிலும் விலகி இருக்க வேண்டும்.

தஸ்கியாவில் மனிதனுக்கு ஓர் உன்னதத் தன்மையைக் கொடுக்கிறது; மனிதனை வானவர்களின் தோழமை நிலைக்குத் தகுதியுடையவராக ஆக்குகிறது. மனிதனை இறைவனிடம் நெருங்க வைக்கிறது. தஸ்கியா இன்றி மனிதன் இவை இல்லாமல் காய்ந்த மரம் போல் இருக்கிறான். ஆனால், தஸ்கியாவிற்குப் பிறகு மனிதன் ஒரு பசுமையான மரமாக ஆகிவிடுகிறான்.

◆◆◆

## தஸ்கியாவும் காலத்தின் கோரிக்கைகளும்

பொதுவாக, மனிதனின் மனப்போக்கு வயதுக்கு வயது மாறுபடும். ஒருவர் தனது சிந்தனைக்கு ஏற்றாற்போல் எதை யாவது ஏற்றுக்கொள்கிறார். இதுவே மனத்தின் முகவரி எனப்படும். மனித மனத்தில் மற்ற விஷயங்களில் விட்டுக்கொடுத்தல் அவசியம். தஸ்கியாவின் விஷயத்திலும் இது அவசியம்.

பழங்காலத்தில் சிந்தனை மரபு சார்ந்தாக இருந்தது. ஆனால், நவீன யுகம் அறிவியல் சிந்தனை நிறைந்ததாக உள்ளது. தற்போதைய மக்களிடம் தஸ்கியாவைக் கொண்டுவர அவர்களின் மனத்தை ஈர்த்துக் கவனிக்கும் வகையில் பேசுவது அவசியமானதாகும். தற்காலத்தில் ஆன்மா தூய்மைப்படுத்துதலின் ஆதாரம் பண்டைய காலத்தில் இருந்ததைப் போலவே உள்ளது. இருப்பினும் பேச்சு முறை மற்றும் பகுத்தறிவு முறை ஆகிய இரண்டிற்கும் இடையே அணுகுமுறையில் வேறுபாடு உள்ளது. பழங்காலத்தில் பாரம்பரிய முறைகள் அந்த வயதினருக்குப் பயனுள்ளதாக இருந்தன. ஆனால், தற்போதைய காலத்தில் பேச்சுநடையைப் பயனுள்ள (தஸ்கிய) மாற்றுவது அவசியமாகும். அப்போதுதான் தஸ்கியாவின் முக்கியத் துவத்தைப் புரிந்து கொண்டு அதைத் தன் வாழ்வில் கடைப் பிடிக்க நவீன மனிதனால் முடியும்.

எடுத்துக்காட்டாக, பண்டைய காலங்களில் தூய்மைப்படுத்துதல் அல்லது சீர்திருத்தம் என்ற சொல் பயன்படுத்தப்பட்டது. இந்த வார்த்தை பண்டைய பாரம்பரிய மனத்தைக் குறிக்கும்.

இருப்பினும், இந்த விஷயத்தை நாம் சொல்லும் விதத்தையோ அல்லது பேசும் முறையையோ மாற்றினால் மனிதன் இந்த விஷயத்தை நன்றாகப் புரிந்துகொள்ள முடியும். அதாவது, ஒவ்வொரு நபரும் பல்வேறு காரணங்களுக்காக மனத்தை

நிலைநிறுத்துவதற்கான ஒரு வழக்கு என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். ஒரு மனிதனுடைய சீர்திருத்தத்தின் நோக்கத்திற்காக அவனது மனத்தை மறுசீரமைப்பது அவசியம். அவனுடைய எதார்த்தத்தை உள்ளபடியே பார்க்கும் திறனுடையவராக அவனை உருவாக்கி, அதனால் துல்லியமான கருத்துகளை உருவாக்க வேண்டும். தஸ்கியாவின் இந்தப் பணியின்படி மக்களின் மனத்தைத் திருப்திப்படுத்த வழிகாட்டி அல்லது ஆசிரியருக்கு பண்டைய மற்றும் நவீன கற்றல் பற்றிய பரந்த அறிவைக் கொண்டிருப்பது அவசியம். இது இல்லாமல் நவீன மனிதனால் தஸ்கியாவின் பணியைத் திறம்பட செய்ய முடியாது.

◆◆◆

## தஸ்கியாவுக்கான நிபந்தனைகள்

தஸ்கியா என்பதை தொழில்நுட்ப அறிவியல் மட்டுமல்ல. தொழில்நுட்ப அறிவியலை வார்த்தைகளில் முழுமையாக வெளிப்படுத்த முடியும். தஸ்கியா என்பது உணர்தலின் அறிவியல் மற்றும் ஓரளவு மட்டுமே வார்த்தைகளில் வெளிப்படுத்த முடியும். ஆன்மா தூய்மைப்படுத்துதலின் ஒவ்வொரு அம்சத்திற்கும் தேவைப்படுகின்றன. இது தஸ்கியாவை நாடுபவரால் மட்டுமே உருவாக்க முடியும்.

தஸ்கியாவைத் தேடுபவர்கள் தனது தேடலில் முற்றிலும் தீவிரமாக இருப்பது தஸ்கியாவை அடைவதற்கு அவசியமாகும். அதாவது, அவரது மனம் தயாராக இருக்க வேண்டும். மற்றும் கற்க மிகவும் ஆர்வமாக இருக்க வேண்டும். எல்லா விதமான தப்பெண்ணங்களிலிருந்தும் விடுபட வேண்டும். ஒரு சிக்கல் இல்லாத சுதந்திர ஆன்மா இருக்க வேண்டும். விஷயங்களை உள்ளபடி பார்க்கும் திறன் கொண்டவராக இருக்க வேண்டும். விமர்சனத்தை எதிர்த்து நிற்கும் திறன், எந்த முன்நிபந்தனையும் இல்லாமல் உண்மையை ஏற்றுக்கொள்ளவும் தனது தவறு களை உடனடியாக ஒப்புக்கொள்ளவும் தயாராக இருக்க வேண்டும். இறுதியாகக் கூறினால் அவர் விஷயங்களைச் சரியான கோணத்தில் பார்க்க வேண்டும்.

தஸ்கியாவின் செயல்முறையில் இரண்டு தரப்பினர் ஈடுபட்டுள் ளனர். ஒருவர் ஆசிரியர்; மற்றொருவர் தேடுபவர் ஆவார். இந்த இருவருக்கும் 100சதவீத பங்கு இல்லை. ஒவ்வொருவரும் 50சதவீத பணியைச் செய்ய வேண்டியுள்ளது. ஆசிரியரின் பங்கு உண்மையான அர்த்தத்தில் வழிகாட்டியாக இருப்பது ஆகும். குர்ஆன் மற்றும் ஹதீஸ்களை ஆழமாகப் படிப்பதன் மூலம் அவர் இந்த விஷயத்தை

முழுமையாகப் புரிந்து கொண்டிருக்க முடியும். ஆனால், அதை சிறந்த முறையில் விளக்க முடியும்.

இந்த விஷயத்தில் மறுபாத்திரத்தை, சத்தியத் தேடலில் இருப்பவர் ஏற்க வேண்டும். தேடுபவர் முழுமையாக சத்தியத்தை ஏற்றுக்கொள்ளும் திறன் கொண்டவராக இருக்க வேண்டும். அவர் செய்தியைப் புரிந்துகொள்ள தனது நிபந்தனையிலிருந்து வெளியே வர வேண்டும். அவர் தனது நிலையான மனநிலையை விட உயர்ந்தவராக இருக்க வேண்டும். உண்மைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமே தவிர, இதை யார் சொன்னது என்பதற்கு அல்ல. இந்த எல்லா குணங்களையும் கொண்ட ஒருவர் தஸ்கியாவின் பாதையை வெற்றிகரமாகப் பின்பற்ற முடியும்.

◆◆◆

## உண்மையை ஏற்றுக்கொள்வது

மனிதகுலத்தின் மிக உயர்ந்த பண்பின்படி மனிதனால் யதார்த் தத்தை அல்லது உண்மையை ஏற்றுக்கொள்ள முடியும். இது ஒவ்வொரு மனிதனுக்கும் மிகவும் முக்கியமானது ஆகும். மேலும், யதார்த்தத்தைக் கண்டறிவதன் விளைவாக அதற்கு அங்கீகாரம் கிடைக்க வேண்டும். ஒருவருக்கு உண்மை தெரியாவிட்டால் அவர், அறியாத நபராகக் கணக்கிடப்படுவார். ஒரு நபர் உண்மையைக் கண்டுபிடித்த பிறகு அதைப் பகிரங்கமாக வெளிப் படுத்தத் தவறினால் அது இரட்டை தரங்கொண்டு வாழ்வதாகவோ அல்லது பாசாங்குத் தனமாகவோ இருப்பதாக ஆகும்.

இது ஒன்றும் எளிமையான செயல் அல்ல. உண்மையில் மனித ஆளுமையின் சரியான பாதையில் வளர்ச்சி அடைவது மற்றும் மனித ஆளுமையின் இந்த வளர்ச்சிக்கான மற்றொரு பெயர்தான் தஸ்கியா என்பதாகும்.

தஸ்கியாவில் மர்மமானது என ஒன்றும் இல்லை. தஸ்கியா என்பது மனிதனுக்கு இறைவனைப் பற்றி கற்பிப்பதற்கான உணர்வை ஏற்படுத்த உதவுகிறது. ஒவ்வொரு அனுபவமும் அவனை இறைவனிடம் நெருக்கமாகக் கொண்டுவருவதற்கு ஒரு வழியாக இருக்கிறது. இந்த அனுபவங்களின் மூலம் ஓர் ஆளுமை உருவாகிறது. இது தூய்மைப்படுத்தப்பட்ட ஆளுமை என்று அழைக்கப்படுகிறது.

உண்மை என்னவென்றால், முழு விஷயமும் சரியான அல்லது தவறான பண்புகளில் ஒன்றாக இருக்கும். இறைவனைத் தவிர வேறு எவருக்கும் நிகழ்வுகளைத் தவறாகக் கூறுவது ஒருவரின் ஆன்மா மாசுபடுத்துவதாகும். இது தன்னைத் தூய்மைப்படுத்தும் வாய்ப்புகளை இழக்கச் செய்வதாகும். மாறாக, ஓர் உண்மையான

படைப்பாளிக்கு நிகழ்வுகளைக் கற்பித்தால் ஒருவர் தனது ஆன்மாவை விடுவித்து உயர்த்துகிறார். அத்தகைய வாய்ப்புகளைப் பயன்படுத்துவதன் மூலமும் ஒருவர் தனது தஸ்கியாவின் மூலமும் ஆளுமையை வளர்த்துக்கொள்கிறார். தஸ்கியாவை ஒரு வெற்றிடத்தில் அடைய முடியாது. இது வாழ்க்கையில் அன்றாட நிகழ்வுகளின் போக்கில் வருகிறது. தனிமையில் செய்யப்படும் சில மர்மமான செயல்கள் அல்ல; தஸ்கியாவிற்குத் தேவையானது விழித்தெழுந்த மனம்தான்.

◆◆◆

# தஸ்கியாவும் தியாகமும்

தஸ்கியா என்பது எளிமையான விஷயம் அல்ல. இதற்கு எப்போதும் சில தியாகம் தேவைப்படுகிறது. அது உடல்ரீதியானது அல்ல, உளவியல்ரீதியானது. இந்த தியாகம் தஸ்கியாவைப் பெறுவதற்கு எதிராக இயங்கும் விஷயங்களை அதன் பொருட்டு முற்றிலும் கைவிடுவதாகும். நாம் எதையாவது சாதிக்க வேண்டுமானால், வேறு சில விஷயங்களை விட்டு விட வேண்டும் என்பது இயற்கையின் கொள்கையாகும். இந்தக் கொள்கை மற்ற எந்த விஷயத்தைப் போலவே தூய்மைப்படுத்துதல் விஷயத்திலும் முக்கியமானது.

நாம் ஒவ்வொருவரும் பழக்கவழக்கங்களிலிருந்து விடுபட வேண்டிய நிலையில் இருக்கிறோம். ஒவ்வொரு ஆணும் பெண்ணும் சுற்றுச் சூழல் பாதிப்புகள் காரணமாக தஸ்கியாவிற்குத் தீங்கு விளைவிக்கும் சில பழக்கவழக்கங்களுக்கு ஆளாகி விடுகிறார்கள். தஸ்கியாவை நாடுபவருக்கு இத்தகைய பழக்க வழக்கங்களிலிருந்து முற்றிலும் விடுபடுவது மிகவும் அவசியம். இந்தப் பழக்கவழக்கங்களில் சில, சிந்திக்காமல் அதிகமாகப் பேசுதல், குடும்பத்தின் தேவைகளிலும் உணவு உடைகளிலும் கலாச்சாரத்தைப் பின்பற்றுவதிலும் பொழுதுபோக்கு ஆகியவற்றிலும் அதிகம் ஆர்வம் காட்டுதல், ஒருவரின் குறைபாடுகளைப் பற்றி மற்றவர்களிடம் பேசுதல், ஷாப்பிங் மற்றும் உல்லாசப் பயணங்களுக்குச் செல்வது, தேவைக்கு மட்டும் இல்லாமல் ஆடம்பரமாகச் செலவு செய்தல் மேலோட்டமான ரசனைகள், விமர்சனங்களில் கோபம் கொள்வது மற்றும் பாராட்டும்போது மிக்க மகிழ்ச்சி அடைவது, பொருளின்மீது பேராசை கொள்வது, தேவைகளுக்குள் தன்னைக் கட்டுப்படுத்தாமல் இருப்பது, எளிமைக்கு பாதிப்பை ஏற்படுத்துவது போன்றவையாகும்.

எல்லாவற்றைப் போலவே தஸ்கியாவிற்கும் ஒரு விலை உண்டு. அதாவது, இந்த இலக்கை அடைவதற்கு எதிரான எல்லா வற்றிலிருந்தும் விலகி இருப்பதாகும். தஸ்கியாவை விரும்புபவன், அதை அடைவதைத் தடுக்கும் அனைத்தையும் விட்டுக்கொடுக்கத் தயாராக இல்லாததால், நிச்சயமாக அவனது தேடலில் தீவிர மானவனாக அவன் இல்லை. தஸ்கியாவைத் தேடுபவன் தீவிர குணம் இல்லாதவனாக இருந்தால், அது ஒருபோதும் நிஜமாகி விடாது. ஆன்மா தூய்மைப்படுத்துதலும் அற்பமான மனநிலையும் ஒன்றாகப்போவதில்லை.

தஸ்கியாவைப் பின்தொடர்வதில் தீவிரமாக இருக்கும் ஒருவன் அதற்குச் சாதகமான விஷயங்கள் எது மற்றும் சாதகமற்ற விஷயங்கள் எது என்பதை அவனே உணர்ந்துகொள்வான்.

தஸ்கியாவிற்குச் சாதகமாக உள்ளதைத் தொடரவும் அதற்கு எதிரான எதையும் முற்றிலுமாகத் தவிர்க்கவும் அவனது நேர்மை கட்டுப்படுத்தும், வற்புறுத்தும். ஒரு மனிதன் நிச்சயமாக நல்ல நிலையை அடைவான் என்பதற்கு நேர்மையே உத்தரவாதம்.

◆◆◆

# தஸ்கியா : ஓர் உளவியல் செயல்பாடு

தஸ்கியாவானது எந்த வகையான வாய்மொழி மூலமும் சாத்திய மில்லை. அது எந்த உடற்பயிற்சியுடனும் தொடர்புடையது அல்ல. தஸ்கியா முழுக்க முழுக்க ஒரு உளவியல் செயல்பாடு, அதை அந்த மட்டத்தில் மட்டுமே அடைய முடியும்.

ஒரு உளவியல் செயல் என்பது அறிவுசார் மட்டத்திலான ஒரு செயலைக் குறிக்கிறது. மனிதனின் மனம் அனைத்து வகையான மனித வளர்ச்சியின் மையத்தில் உள்ளது. உண்மையில், மனித ஆளுமையை வடிவமைப்பதில் தீர்மானிக்கும் காரணியாக இருப்பது மனமே. தூய்மைப்படுத்தப்பட்ட ஆளுமை, தூய்மைப் படுத்தப்படாத ஆளுமை இரண்டும் மனத்தின் உற்பத்தியே ஆகும்.

இது ஒரு நேர்மறையான அறிவுசார் வளர்ச்சியாகும். இது உண்மையில் தஸ்கியாவிற்குத் தேவைப்படுகிறது. அதாவது, ஒருவரின் நனவான மனத்தை அது பாகுபாடு காட்டக்கூடிய அளவிற்கு வளர்க்க வேண்டும். அது எதிர்மறை எண்ணங்களை நேர்மறையான எண்ணங்களாக மாற்றலாம். அது படைப்பாளியின் பார்வைகளை உருவாக்கலாம். உருவாக்கம் மற்றும் பொருள் நிகழ்வுகளில் ஆன்மிக அம்சங்களைக் கண்டறியலாம். அது ஷைத்தானின் சோதனைகளை நிராகரிக்கலாம். அது சுயத்தின் சோதனைகளைவிட உயரலாம். அது பயனற்ற செயல்களிலிருந்து விலகி இருக்கலாம். அது தன் உண்மையான நலம் விரும்பிகளை உருவாக்கலாம். அறிவுரைகளை அதன் இயல்புக்கு எதிராக இருந்தாலும் ஏற்கலாம். அது சுய சிந்தனைக்கு எதிரானதை உருவாக்கலாம். அதனால் ஆன்மிக இலக்குகளை தனக்கென அமைத்துக் கொள்ள முடியும். அது பொருள் சார்ந்த இலக்கு களைவிட உயர்ந்திருக்கும். இந்த வழிகளில் சிந்திக்கும் ஒருவன் மறுமையை நோக்கி இருப்பான்.

இந்த அனைத்து வளர்ச்சியும் உளவியல் மட்டத்தில் நடை பெறுகிறது. இது ஆழ்ந்த சிந்தனையின் விளைவாகும். ஒருவரால் ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபட முடியாதபோது ஒருபோதும் உயர்மட்ட தஸ்கியாவை ஆரம்பிக்க முடியாது.

இந்த வளர்ச்சிகள் அனைத்தும் ஆழ்ந்த சிந்தனையின் விளைவாக உளவியல் மட்டத்தில் நடைபெறுகின்றன. ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபட முடியாத ஒருவன், ஒருபோதும் உயர்ந்த தஸ்கியாவை அடைய மாட்டான். தஸ்கியாவின் செயல்முறையை ஆழ்ந்த சிந்தனைத் திறன் கொண்ட ஒருவரால் மட்டுமே தொடங்க முடியும். தஸ்கியா, உண்மையில், உளவியல் சுத்திகரிப்புக்கான மற்றொரு பெயர். முதலாவதாக, தஸ்கியா உளவியல் மட்டத்தில் செய்யப்படுகிறது. அப்போதுதான் முழு மனித இருப்பின் மட்டத்திலும் தஸ்கியாவை அடைய முடியும்.

◆◆◆

## நேர்நிலை உளவியலின் முக்கியத்துவம்

இப்ராஹிம் அவர்கள் நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தனது மனைவி ஹாஜரா, மகன் இஸ்மாயில் ஆகிய இருவரையும் அரேபியாவின் பாலைவனத்தில் குடியமர்த்திவிட்டு சிரியா விற்குத் திரும்பினார்கள். இஸ்மாயில் வளர்ந்த பின்பு ஜுர்ஹும் கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். இப்ராஹிம் சில காலங்கள் கழித்து திரும்பி வந்த போது, இஸ்மாயில் அவர்களின் மனைவி மட்டும் வீட்டில் இருப்பதைக் கண்டார். அந்தப் பெண் மிகவும் கடினமான சூழ்நிலையில் வாழ்ந்துவருவதாக இப்ராஹிம் அவர்களிடம் புகார் கூறினார். இப்ராஹிம் அவர்கள் பின்வரும் செய்தியை இஸ்மாயில் அவர்களிடம் தெரிவிக்கும்படி கூறிவிட்டு திரும்பிச் சென்றுவிட்டார். "உன் வீட்டு வாசலை மாற்றிவிடு." (புகாரி)

அதன்பின் இஸ்மாயில் அவர்கள் தனது மனைவியை விவா கரத்து செய்துவிட்டு வேறொரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். இறைத்தூதர் இப்ராஹிம் அவர்களும் சிறிது காலத்திற்குப் பிறகு தன்னுடைய குடும்பத்தைச் சந்திப்பதற்காகத் திரும்பி வந்தார். இஸ்மாயில் / இஸ்மவேல் அப்பொழுதும் வெளியில் சென்றிருந்தார். அவர்களது புதிய மனைவி இப்ராஹிம் அவர்களிடம் எந்தப் புகார்கள் அல்லது வெறுப்புப் பேச்சு போன்றவற்றைப் பேசாமல் எல்லாவற்றிற்கும் நன்றி சொன்னார். இதைக் கேட்ட இப்ராஹிம் அவர்கள் கூறினார் இஸ்மாயில். வீட்டிற்கு வந்தவுடன் எனது இந்தச் செய்தியை அவரிடம் கூறச் சொன்னார். "உன் வீட்டு வாசலை தக்க வைத்துக் கொள்." (புகாரி)

இப்ராஹிம் அவர்கள் தனது குடும்பத்தைப் பாலைவனத்தில் குடியமர்த்தி இருந்தார். அதன் மூலமாக அந்த இயற்கைச் சூழலில் ஒரு புதிய தலைமுறையை உருவாக்க வேண்டும்; அது

ஏகத்துவத்தின் பணியை எடுத்து உலகம் முழுவதும் பரப்ப வேண்டும்; இப்ராஹிம் பற்றிய சம்பவம் இந்த மகத்தான பணிக்குத் தேவைப்படும்; தனி நபர்கள் எல்லாவற்றிற்கும் மேலாக நேர்நிலை உளவியலைப் பெற்றிருக்க வேண்டும்; குறைகூறும் மனப்பான்மை இல்லாமல் இருக்க வேண்டும். என்பதைக் காட்டுகிறது. தஸ்கியாவின் செயல்பாட்டில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்ன என்பதை இது காட்டுகிறது. மனிதன் முறையீடு செய்வதையும் குறைகள் கூறுவதையும் நிறுத்துகிறான். மேலும், முறையிடுவதற்கான ஒவ்வொரு காரணம் இருந்தபோதிலும் அவன் முழு அர்த்தத்தில் நேர்மறையான சிந்தனையாளராக மாறுகிறான். ஆனால், எதிர்மறை சிந்தனை என்பது தஸ்கியாவை கொல்லக்கூடியது எனலாம். அதே சமயம் நேர்மறை சிந்தனை அவசியம். மாறாக, எதிர்மறை சிந்தனையில் ஈடுபடும் ஒருவர் ஷைத்தனின் செயலுக்கு ஆளாகிறார். ஆனால், நேர்மறை சிந்தனையில் ஒருவர் வானவர்களின் தோழமையில் வாழ்கிறார். மேலும், வானவர்களின் உதவியின்றி தஸ்கியாவை அடையமுடியாது என்பது உண்மையாகும்.

◆◆◆

## சுயபரிசோதனை தஸ்கியாவின் அடிப்படை

நபித்தோழர் உமர் பாரூக் அவர்கள் கூறிய ஒரு பழமொழி உள்ளது. “நீங்கள் சுயபரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதற்கு முன் உங்களை நீங்களே சுயபரிசோதனை செய்துகொள்ளுங்கள்.” தஸ்கியாவின் அடிப்படையே சுயபரிசோதனைதான். இது ஒரு பயிற்சி முகாம் மூலம் வராது. எந்தவொரு முறையான படிப்பும் இந்த நோக்கத்திற்கு உதவியாக இருக்காது. அல்லது குறிப்பிட்ட வார்த்தைகளை மீண்டும் மீண்டும் திரும்பக் கூறுவதும் உதவியாக இருக்காது. சுயமதிப்பீடு அல்லது தன்னைச் சீர்திருத்திக் கொள்வது தஸ்கியாவை எவ்வாறு அடைவது என்பன குறித்து ஆழ்ந்த சிந்தனை செய்வது மட்டுமே அதை அடைவதற்கான ஒரே வழி.

மனிதன் மட்டுமே கருத்தியல் சிந்தனை கொண்ட ஒரே உயிரினமாவான். மனிதன் கருத்தியல் சிந்தனையின் திறன் கொண்ட ஒரு விலங்கு என்று வரையறுக்கப்படுகிறான். அவனால் மரத்தை வடிவமைக்க முடியும். இரும்பை வடிவமைக்க முடியும். ஆனால், மனிதன் அவ்வளவு இணக்கமானவன் அல்ல. அவனுடைய சொந்தப் பொறியாளர் அல்லது தயாரிப்பாளராக இருக்கிறான். மனிதன் மற்றவர்களின் செல்வாக்கிற்கு அடிபணிய விரும்பவில்லை என்றால் அவனது ஆளுமையை யாரும் வடிவமைக்க முடியாது. அதனால்தான் மனிதனின் ஆளுமை வளர்ச்சியிலும் அவனது ஆன்மா தஸ்கியாவிலும் சுயபரிசோதனை ஒரு பங்கு வகிக்கிறது.

தஸ்கியாவில் ஈடுபடுவதற்கு வலுவான ஊக்கத்தை அளிப்பது மட்டுமே ஆசிரியரின் பணி. மனிதன் தன்னைத் தூய்மைப்படுத்திக் கொள்ளாமலும் தன்னைச் சீர்திருத்திக்கொள்ளாமலும் இருந்தால், என்றென்றும் நாசமாகிவிடுவோம் என்ற சிந்தனையை அவர்

மனிதனிடம் வளர்க்க வேண்டும். அவன் தஸ்கியாவை மேற்கொள்ள வேண்டும். அவன் செய்ய வேண்டிய அனைத்தையும் நாளைய தினத்திற்காகக் காத்திருக்காமல் இன்றே செய்ய வேண்டும்.

மனிதன் தன் தவறுகள் அனைத்தையும் நியாயப்படுத்த முனைகிறான். நான் சரியாக இருக்கிறேன் என்பதை நிரூபிப்பதற்காக எப்போதும் சில வார்த்தைகளைக் கண்டுபிடிக்கிறான். இந்த மனநிலையை வேரறுக்கவேண்டியது தன்னைத் தூய்மைப் படுத்திக்கொள்ள விரும்புபவனுக்கு அவசியம். ஆனால், இது சம்பந்தப்பட்ட நபரால் மட்டுமே செய்ய முடியும். வேறு யாராலும் முடியாது.

◆◆◆

## ஆத்ம சுய பரிசோதனையில் எவ்வாறு ஈடுபடுவது?

தஸ்கியாவுக்கான உண்மையான ஆதாரம் சுயபரிசோதனை செய்துகொள்வதாகும். அதாவது, தன்னைப் பற்றி சிந்திப்பது ஒருவரின் வார்த்தைகள் மற்றும் செயல்களைப் பகுப்பாய்வு செய்வது; அல்லது வேறுவிதமாகக் கூறினால், தனக்கு எதிராகச் சிந்தித்து, தன்னைப் பற்றி புறநிலையாக மதிப்பிடுவதன் மூலம் சுயநீதிபதியாக மாறுவது போன்றவைகளாகும். மேலும் இத்தகைய சுயபரிசோதனை இல்லாமல் எந்த தஸ்கியாவும் சாத்தியமில்லை.

மனிதனிடம் உள்ள மிகவும் சக்திவாய்ந்த உணர்வு அகங்காரமாகும். இந்த உணர்வு தீவிரமானது. ஒவ்வொரு மனிதனும் எல்லாம் அவன்தான் என்ற எண்ணத்துடன் வாழ்கிறான். இது சுயபெருமையின் ஒரு வடிவம். இந்த மாதிரியான அணுகுமுறை தஸ்கியாவை விரும்புவோருக்கு வெறுப்பாக இருக்க வேண்டும். மனிதன் செய்யவேண்டியது என்னவெனில் தனக்குள்ளேயே சுய விரோத சிந்தனையை வளர்த்துக்கொள்ள வேண்டும். அதனால் அவன் விமர்சனங்களை எதிர்கொள்ள முடியும். இந்த உணர்வு, உமர் இப்னு அல்கத்தாப் அவர்களிடம் மிகவும் தீவிரமாக இருந்தது. மேலும், “என் குறைகளை எனக்குப் பரிசாக அனுப்பும் மனிதனுக்கு இறைவன் அருள்புரிவானாக!” என்று அவர் கூறினார்.

இந்த ஆத்ம சுயபரிசோதனை மனப்பான்மை ஒருவரின் சொந்த உதவியற்ற தன்மையின் கண்டுபிடிப்பிலிருந்து பிறக்கிறது. தேடுபவர், ‘நான்’ என்ற உணர்வு, தனது சொந்த அறிவு அல்லது உணர்வுகளின் மட்டத்தில் மட்டுமே உள்ளது. உண்மையில் அது யதார்த்தத்தில் இல்லை என்பதை தஸ்கியாவின் தேடல் உடையவன் கண்டறிய வேண்டும். அவருக்குச் சொந்த உணர்வுகளுக்கு வெளியே அவனுக்கு எதற்கும் அதிகாரமும் இல்லை. அவன் தன் சொந்த உணர்வுகளுக்கு வெளியே எதன்

மீதும் அதிகாரம் செலுத்துவதில்லை. அவனால் மறுஉலக வாழ்க்கை, தெய்வீக நீதிமன்றம் போன்ற விஷயங்களில் எந்த அதிகாரத்தையும் செலுத்த முடிவதில்லை. தனது முழுமையான சக்தியின்மையைக் கண்டறியும்போது, அவனுக்கு உறுதியற்ற உணர்வு அவசியம் பிறக்கிறது. இந்த உதவியற்ற உணர்வுதான் மனிதனை சுயபரிசோதனையில் ஈடுபடுத்தத் தூண்டுகிறது. இந்தக் கண்டுபிடிப்பில்தான் தஸ்கியாவின் உண்மையான இரகசியம் உள்ளது.

◆◆◆

## ஒரு தேர்வுத்தாளை முன்கூட்டியே பார்ப்பது

உண்மையான தேடலுடைய ஒருவன் தஸ்கியாவை கனவுகளின் வடிவத்தில் தெளிவான வழிகாட்டுதலைக் காண்கிறான். அவர் கனவுகள் மூலம் தன் பாதையில் எப்படி முன்னேற வேண்டும் என்பதைக் கற்றுக்கொள்கிறார். இந்த வழியில் தேடுபவர் தனது விருப்பங்களைச் சிறப்பு தெய்வீக உதவியால் அருளப்பட்டது போல் உறுதியுடன் செய்யமுடியும். ஒரு மாணவனுக்கு ஒரு தேர்வுத்தாளுடன் முன்கூட்டியே அணுகுவது போல இதை ஒப்பிடலாம். தஸ்கியாவைத் தேடுபவர் அனைத்துவிதமான கேள்விகளையும் மீண்டும் மீண்டும் எதிர்கொள்கிறார். அவர் இரண்டு விருப்பங்களில் ஒன்றை எடுக்க வேண்டும் என்று வைத்துக்கொள்வோம். அத்தகைய சந்தர்ப்பங்களில் அவர் இறைவனிடம் பிரார்த்தனை செய்து கேட்டுக்கொண்டால், இறைவன் அவருடைய பிரார்த்தனையை ஏற்று அவரை ஒரு கனவின் மூலம் வழிநடத்துவது சாத்தியம். இது அவரை சந்தேகங்கள் மற்றும் தயக்கங்களிலிருந்து வழிநடத்தும்.

இத்தகைய கனவுகள் சந்தேகத்திற்கு இடமின்றி இறைவனின் அருள்களில் ஒன்றாகும். ஆனால், கனவு கண்ட பின்னரும் யாராவது வழிகாட்டுதலை ஏற்கவில்லை என்றால் அவரது வழக்கு தனது தேர்வுத்தாளைப் பற்றி முன்கூட்டியே அறிந்த பிறகும் தேர்வில் தோல்வி அடைந்த மாணவனுக்கு ஒப்பிடப்படலாம்.

தஸ்கியா 50% தேடுபவரிடமும் மற்ற 50% இறைவன் மீது அக்கறை கொண்டவரிடமும் இருக்கிறது. தஸ்கியாவை நாடுபவர் தொடர்ந்து இறைவனிடம் பிரார்த்தனை செய்ய வேண்டும். இந்தப் பிரார்த்தனை அவரை இறைவனிடம் இணைக்கும் வழிமுறையாக மாறும். அவர் படுக்கைக்குச் செல்வதற்கு முன்பு இஸ்திகாரா (இரண்டு ரக்அத்) தொழ வேண்டும். ஒரு கனவின்

மூலம் தனக்கு வழிகாட்டுதலைக் கொடுக்கும்படி இறைவனிடம் கேட்க வேண்டும். இஸ்திகாரா என்பது தனது விவகாரங்களில் இறைவனின் ஆலோசனையைப் பெறுவதைப் போன்றது. மேலும், இதைத் தொடர்ந்து செய்பவர் ஒருபோதும் வழி தவற மாட்டார். இறைவன் அவனுடைய பிரச்சினையைத் தீர்க்க ஒரு கனவைக் காண்பித்தால் அவர், அதை இறைவன் அவனுடைய தேர்வுத்தாளின் முன்னோட்டத்தைக் கொடுத்ததாகக் கருத வேண்டும். அவனுக்கு உண்மையில் வேறு வழியில்லை. இந்த அளவிற்கு இறைவனால் வழிகாட்டப்பட்டு, அதை ஏற்கத் தவறியவருக்கு அது மன்னிக்க முடியாத குற்றமாக இருக்கலாம். அத்தகைய ஒருவரிடமிருந்து எந்த சாக்குப்போக்குகளையும் இறைவன் ஏற்க மாட்டான். மேலும், அவன் இறைவனிடமிருந்து எந்தத் தொடர்பையும் ஏற்படுத்துவதிலிருந்து என்றென்றும் விலக்கப்படுவான்.

◆◆◆

## தஸ்கியாவும் உலகத்தைத் துறத்தலும்

தஸ்கியாவை அடைவதற்கு பிற்காலத்தில் ஒரு குழு உலகத்தைத் துறக்கும் பாதையை ஏற்றுக்கொண்டது. ஆனால், தஸ்கியாவை அடைவதற்கு உலகத்தின் மீதான வெறுப்பு நடைமுறை அர்த்தத்தில் இல்லாமல் உளவியல் அர்த்தத்தில் தேவை. உலகத்தைத் துறப்பது என்பது (தாவா) அழைப்பியல் சிந்தனை இல்லாததன் விளைவாகும்.

உலகில் மனிதர்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். எனவே, உலகத்தைத் துறப்பது என்பது மக்களைத் துறப்பதற்கு ஒப்பானது. மக்களை எந்த சாக்குப்போக்கிலும் கைவிட அனுமதிக்க முடியாது. மக்களை மற்றவர்கள் வேறு கோணங்களில் பார்க்கலாம். ஆனால், மார்க்க அழைப்புப் பணி மேற்கொள்ளும் ஒருவர் மனிதனை சாத்தியமான அழைப்பு விடுக்கப்பட வேண்டியவராகப் பார்க்கிறார். ஓர் அழைப்புப் பணியாளரின் பார்வையில் ஒவ்வொரு மனிதனும் இறைவனின்பால் அழைப்பு விடுக்கப்பட வேண்டியவர் மட்டுமே.

அவன் பகைவனாக இருந்தாலும் ஏழையாக இருந்தாலும் சாமானியனாக இருந்தாலும், மிக முக்கியமான நபராக இருந்தாலும் (VIP) ஆட்சியாளராக இருந்தாலும்; ஆட்சி செய்யப்பட்டவராக இருந்தாலும் அவர் போட்டியாளராகவோ அல்லது கொடுங்கோன்மையானவரோ யாராக இருந்தாலும் மார்க்கப் பணியாளர்களின் பார்வையில் அவர் ஒரு மனிதர் மட்டுமே. மேலும், மார்க்க அழைப்புப் பணியாளரின் முதல் ஆசை அவர்களுக்கு உண்மையைத் தெரிவிப்பதுதான்.

மார்க்க அழைப்புப் பணியாளர் ஒருவர், ஒரு வாயிலில் நுழைந்தால் அவர் மற்றொரு வாயில் மூலம் வெளியேறிவிடுவார்

என்று கூற முடியாது. அதற்குப் பதிலாக வருபவர், தனக்கு ஓர் அழைப்பு விடுக்கப்படவேண்டியவர் என்று சொல்வார். மேலும் அவரைச் சந்தித்து அவருக்கு ஞானத்துடன் சத்திய செய்தியையும் அறிவிப்பார்.

உலகத்தைத் துறப்பது என்பது உண்மையில் அழைப்பு விடுக்கப்பட வேண்டியவரைத் துறப்பதாகும். உலகத்தைத் துறப்பது என்பது பொதுவாக தெய்வீக உண்மையைத் தெரிவிக்கும் மார்க்கப் பணி அழைப்பாளரிடமிருந்து விலகிச் செல்வதாகும். ஒரு வியாபாரி எல்லாவற்றிலிருந்தும் விலகிச்செல்ல முடியும். ஆனால், அவரால் தன் வாடிக்கையாளர்களிடமிருந்து விலகிச் செல்ல முடியாது. அதேபோல் மார்க்கப் பணி செய்பவர் எல்லாவற்றையும் பொறுத்துக்கொள்ள முடியும். அவரால் மது - அழைப்பு விடுக்கப்படவேண்டியவர் இல்லாத இடத்திற்கு ஒதுங்கிச் செல்வதைப் பொறுத்துக்கொள்ள முடியாது. அழைப்பு விடுக்கப்பட வேண்டியவர்களின் மத்தியில் இருக்கும் போது அவர் சில பிரச்சனைகளால் சூழப்படலாம். ஆனால், அவர் அவர்களுடனான உறவுகளை முறித்துக்கொள்ள முடியாததால் அவற்றைக் கவனிக்காமல் விடுகிறார். தஸ்கியாவும் மார்க்க அழைப்புப் பணியும் முஃமின்களுக்கு சமமான முக்கிய குறிக் கோளாகும். மேலும், ஒரு முஃமின் நேர்மையானவராக இருந்தால், தஸ்கியாவிற்கான தனது முயற்சிகளைக் கைவிடுவதோ அல்லது தனது தாவா அழைப்புப் பணி நடவடிக்கைகளைக் கைவிடுவதோ அவருக்குச் சாத்தியமில்லை.

◆◆◆

## தஸ்கியா : ஓர் ஆயத்தச் செயல்பாடு

ஒவ்வொருவருக்கும் தற்போதைய உலகில் ஏதாவது ஒரு வேலை வாய்ப்பு தேவைப்படுகிறது. அனைவரும் ஒரு நல்ல வேலையை விரும்புகிறார்கள். அதனால்தான் சந்தையின் தேவைகளைப் பூர்த்திசெய்ய ஒவ்வொருவரும் தன்னைத் தொழில்ரீதியாகத் தயார்படுத்திக்கொள்கிறார்கள். அதை செய்யத் தவறியவர்கள் வாழ்நாள் முழுவதும் தோல்வியடைவார்கள்.

இதுவே மறுமை உலகத்திலும் உண்மை. ஆனால், தேவைகள் மிகவும் அழுத்தமான இயல்புடையவை. மறுஉலகம் என்பது மிக உயர்ந்த தெய்வீகச் செயல்பாட்டின்படி உள்ள உலகமாகும். இந்த நிகழ்காலத்தில், ஆன்மிகரீதியில் தன்னைத் தயார்படுத்திக் கொண்டு மறுமையை மனத்தில் கொள்பவன் மட்டுமே வெற்றி பெறுவான். இவ்வுலகில் தன்னைச் சரியான முறையில் தயார் படுத்திக்கொள்ளத் தவறியவன், மறுமையில் தோல்வியடைவான்.

இவை அனைத்தும் தகுதியுடன் தொடர்புடையது. ஒரு வகைத் தகுதி இந்த உலகில் வேலை செய்கிறது. மற்றொரு வகைத் தகுதி மறுமையில் பயனளிக்கும். இவ்வுலகில் இறைவனைத் தவிர வேறு ஓர் ஆதாரம் செயல்படலாம். ஆனால், மறுமையில் ஏகத்துவம் மட்டுமே பயனளிக்கும். இவ்வுலகில் ஒருவரின் சுய அக்கறை மட்டுமே பயனுள்ளதாக இருக்கலாம். ஆனால், மறுமையில் அது இறைவனின் கவலை மட்டுமே நன்மை பயக்கும். இவ்வுலகில் பொருள் சார்ந்து விஷயங்களைப் பார்ப்பது லாபகரமானது. ஆனால், மறுமையில் ஆன்மிக கோணத்தில் பார்ப்பது மட்டுமே பயனுள்ளதாக இருக்கும்.

இவ்வுலகில் காணும் பொருளே உண்மை என்ற வாதம் பயன் அளிக்கலாம். ஆனால், மறுமையில் கொள்கையுடையவன்

மட்டுமே வெற்றி பெறுவான். இந்த உலகில் நேர்மையின்மை வெளிப்படையாக வேலை செய்கிறது. இந்த உலகில் உடனடி நலன்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது வேலை செய்கிறது. ஆனால், மறுஉலகில் அவ்வுலக ஆர்வங்களுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுப்பது பயனளிக்கும்.

தஸ்கியா என்பது மறுமையைக் குறித்து தம்மை தயார்படுத்திக் கொள்வது. அதாவது, மறுமைக்காக நன்மை பயக்கும் பண்புகளை தன்னுள் வளர்த்துக்கொள்வதாகும். இதைச் செய்வதற்கான ஒரு வழி என்னவென்றால், உங்கள் வாழ்க்கையில் இதுபோன்ற சம்பவங்களை அடையாளம் கண்டுகொள்வதாகும். நீங்கள் ஏதேனும் ஒரு சிக்கலில் மூழ்கிப் போகிறீர்கள். ஆனால், நீங்கள் இறைவனின் சிறப்பு ஆதரவால் காப்பாற்றப்பட்டு விடுகிறீர்கள். இத்தகைய சோக சம்பவங்கள் அனைவரின் வாழ்வில் நடந்தாலும் பின்னர் மறந்துவிடுகின்றனர்.

தஸ்கியாவைத் தேடுபவருக்குத் தாம் அழிவின் விளிம்பை அடைந்தபோது இறைவனின் சிறப்புத் தலையீட்டால் எப்படி காப்பாற்றப்பட்டோம் என்பதைத் தன் மனத்திற்குப் புத்துணர்ச்சி யூட்டுவதற்காகத் திரும்பத் திரும்ப இதுபோன்ற சம்பவங்களை நினைவுபடுத்துவது அவசியமாகும். இந்தச் சம்பவங்களின் ஒவ்வொரு விரிவான விவரத்தையும் அவர் நினைவில் வைத்துக் கொண்டு, இவ்வாறு இறைவனிடம் மன்றாடி கேட்க வேண்டும்.

"இறைவா! இவ்வுலக வாழ்வில் நான் செய்த கொடூரமான விளைவுகளிலிருந்து என்னை மீண்டும் மீண்டும் காப்பாற்றி விட்டாய். அதே போல் மறுமையில் நரகத்தின் கொடூரமான தண்டனையிலிருந்து என்னைக் காப்பாற்று!"

இந்த விஷயத்தில் மற்றொரு அணுகுமுறை உங்கள் குறைபாடுகள், உங்கள் தவறுகளை நினைவில் வைத்துக்கொள்வது மற்றும் மனந்திருந்தும் உணர்வை உங்களுக்குள் எழுப்புவது ஆகும். எந்தவொரு விஷயத்திலும் நீங்கள் 99% சரியென்றும் 1% மட்டுமே தவறு செய்தீர்கள் என்றும் நீங்கள் உணர்ந்தால், அப்படிப்பட்ட சமயங்களில் 99%ஐ மறந்துவிட்டு 1% ஐ மிகைப்படுத்தி, நீங்கள் 100% உணரத் தொடங்கும் தவறு உங்களுக்கு மனந்திருந்துதல் உணர்வை எழுப்பும். இறைவனுக்குப் பயந்து நடுங்கி, பிரார்த்தனை செய்து, இறைவனிடம் திரும்பி பாவமன்னிப்பு தேடுவீர்கள்.

தஸ்கியா ஒன்றும் மர்மமான விஷயமில்லை. இது அறியப்பட்ட வழிமுறையாகும். அதாவது, தன்னைத் தூய்மைப்படுத்துவதற்கான அனைத்து அம்சங்களைப் பற்றியும் மீண்டும் மீண்டும் சிந்திப்பது. தஸ்கியா என்பது எப்பொழுதும் ஏதோ ஒரு மர்மமான அதிசயத்தின் விளைவாக இல்லாமல் அறிவார்ந்த விழிப்புணர்வின் விளைவாக இருக்கும். இந்த விஷயத்தைப் பற்றி ஒருவர் எவ்வளவு அதிகமாகச் சிந்திக்கிறாரோ அவ்வளவு அதிகமாக ஒரு சுய தூய்மைப்படுத்துதல் நிலையை அடைய முடியும். ஆன்மா தூய்மைப்படுத்துதல் என்பது முழு அர்த்தத்தில் ஒரு நனவான செயல்முறை. இதற்கு உட்படுத்தப்படாமல் அதை அடைவது என்பது வெறும் ஆசைப்படும் சிந்தனைதான். அது ஒருபோதும் நிஜமாகாது.

◆◆◆

# தஸ்கியா : இறைவனை அடைவதற்கான வழிமுறை

மனிதன் படைக்கப்பட்டவன், இறைவன் அவனுடைய படைப்பாளி. அவன் இறுதிவரை இறைவனிடம் நெருங்கி வர வேண்டும் என்பது மனித இயல்பு. ஆனால், தற்பெருமை, எதிர்மறை எண்ணம் போன்ற பல்வேறு விஷயங்கள், மனிதனை இறைவனிடமிருந்து பிரிக்கிறது. தஸ்கியா மனிதனை அத்தகைய எதிர்மறை உணர்வுகளிலிருந்து தூய்மைப்படுத்துகிறது. ஒருவன் இறைவனைத் தவிர மற்றவற்றிலிருந்து தன்னைத் துண்டித்துக் கொள்ளும் தருணத்தில், தன்னைப் படைத்தவனிடம் நெருங்கி விட்டதாக உணர்கிறான். அது மனிதனால் சாத்தியமாகும். அவன் தன்னைச் சுற்றி இறைவனின் இருப்பை அனுபவிக்கத் தொடங்கிவிடுகிறான்.

இறைவனின் அருகாமையிலுள்ள நிலை இறைவனின் தனிப்பட்ட உணர்தலின் அளவைப் பொறுத்தது. எடுத்துக்காட்டாக, இந்த உலகில் வாழ்வதற்கு ஒவ்வொருவருக்கும் எண்ணற்ற விஷயங்கள் தேவைப்படுகின்றன. ஆனால், எந்த மனிதனும் இவை அனைத்தையும் உருவாக்கியவன் அல்ல. மனிதகுலத்திற்கு வேறு யாரோ அவற்றை வழங்கியுள்ளான். இறைவன்தான் சந்தேகத்திற்கு இடமின்றி அந்த அருளாளன். இறைவன் உயர்ந்தவன் மற்றும் அவன் ஒருவன் மட்டுமே கொடுப்பவன். இறைவனின் ஒருதலைப்பட்ச அருட்கொடையால் மனிதன் இவ்வுலகில் இருக்க முடிகிறது என்பதில் சந்தேகமில்லை. இந்த அருட்கொடையின் சங்கிலி ஒரு கணம்கூட உடைந்திருந்தால் மனிதனால் தன்னைத் தக்கவைத்துக்கொள்ள முடியாது.

ஒரு தனி மனிதன் அவனது அருளாளனைக் கண்டறியும்போது இயற்கையாகவே அவனது உள்ளத்தில் இறைவன் மீதான அன்பின் ஊற்று பெருக்கெடுத்து ஓடுகிறது.

குர்ஆனில் விவரிக்கப்பட்டுள்ள உண்மையின் உருவகமாகப் பின்னர் மாறுகிறான். "நம்பிக்கை கொண்டவர்கள், இறைவனை மிகவும் நேசிக்கிறார்கள்." (குர்ஆன் 2:165)

குர்ஆன் படைப்பாளிக்கு அருகாமையில் இருக்க தலை வணங்கு (ஸஜ்தா செய்)வது அவசியம் என்று கட்டளையிடுகிறது. உம் இறைவனுக்கு தலைவணங்கி நெருங்குவீராக! (குர்ஆன் 96:19)

சுய பிரார்த்தனை என்பது என்ன? உண்மையில் இறைவன் மீது அன்பும் பயமும் கொண்ட ஒருவர் செய்யும் பிரார்த்தனை ஆகும். இந்த தீவிர உணர்வுகளால் அவர் தனது இறைவனின் முன் ஸஜ்தா செய்து வணங்குகிறார். இவ்வகையான ஸஜ்தா நம்பிக்கையாளர்களுக்கு ஒரு தெய்வீக ஏற்றம் (மிஃராஜ்) போன்ற தாகும்.

◆◆◆

## தஸ்கியாவின் நோக்கம்

*குர்ஆன் 39-வது அத்தியாயம் சொர்க்கவாசிகளை இவ்வாறு விவரிக்கிறது.*

*தம் இறைவனுக்கு அஞ்சி நடந்தவர்கள் சொர்க்கத்தின்பால் கூட்டம் கூட்டமாக அழைத்து வரப்படுவர். அவர்கள் அங்கு வந்தவுடன் அதன் வாயில்கள் திறக்கப்படும். அதன் காவலர்கள் அவர்களிடம்,"உங்கள்மீது சாந்தி உண்டாகட்டும். நீங்கள் மகிழ்ச்சியாக இருங்கள். இதில் நுழைந்து என்றென்றும் தங்கிவிடுங்கள்" என்று கூறுவர். (அப்போது சொர்க்கவாசிகளான) அவர்கள் "அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்! அவன் எங்களுக்குச் செய்த வாக்குறுதியை உண்மைப்படுத்திக் காட்டினான். எங்களை இந்தப் பூமிக்கு உரிமையாளர்களாக்கினான். சொர்க்கத்தில் நாங்கள் விரும்பும் இடங்களில் தங்கிக்கொள்வோம்" என்று கூறுவர். நற்செயல் புரிவோருக்கு எவ்வளவு சிறப்பான கூலி இது. (நபியே! மறுமையாகிய அந்நாளில் வானவர்கள் இறை யிருக்கையை வட்டமிட்டவாறு தம் இறைவனைத் துதித்துப் போற்றிக்கொண்டிருப்பதை நீர் காண்பீர். (மேலும்) மக்களிடையே நியாயமான முறையில் தீர்ப்பளிக்கப்படும். "அனைத்துலகங்களின் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும்" என்று கூறப்படும். (39:73-75)*

*"எல்லாப் புகழும் அகிலங்களின் இறைவனாகிய அல்லாஹ் விற்கே" என்பது தற்போதைய உலகத்துடன் தொடர்புடைய முதல் அத்தியாயத்தின் ஒரு பகுதியாகும்.*

*இந்த 39-வது அத்தியாயத்தில் வரும் இந்த வார்த்தைகள் மறுமை உலகத்துடன் தொடர்புடையவை. இறைவனை நினைவுகூர்ந்து மகிமைப்படுத்தும் வாழ்க்கை வாழ வேண்டும் என்பதுதான்*

மனிதனின் உண்மையான விருப்பம் என்பதை இது காட்டு கிறது. இவ்வுலகில் விரும்பத்தக்கது அடுத்த உலகத்திலும் விரும்பத்தக்கதாகும். அத்தகைய தூய்மையான ஆன்மாக்களை உருவாக்குவதே தஸ்கியாவின் உண்மையான நோக்கம். மறுமை வாழ்க்கையின் ஒரு பகுதியாக மாறலாம்.

மனிதனுக்குத் தற்போதைய இவ்வுலகில் ஒதுக்கப்பட்ட பணி நாகரிகத்தை நடைமுறைக்கு கொண்டுவருவதாகும். இது மிகவும் பெரிய அளவில் மனிதனால் செய்யப்படும் பணியாகும். இந்த நாகரிகப் பயணம் கற்காலத்திலிருந்து தொடங்கி, மின்னணு யுகத்தின் உச்சத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டது. இது இயற்கை விதிகளின் கண்டுபிடிப்புகளுடன் மகத்தான வேகத்தைப் பெற்றது. ஆனால், உண்மையில் என்ன நடந்தது என்றால், உண்மையுடன் ஒரு தவறு கலந்தது. இயற்கையின் சக்திகளை வென்ற பிறகு மனிதன் இழிவானவனாக ஆனான். ஒரு சர்வாதிகார அமைப்பை நிறுவினான். அவன் சுதந்திரத்தின் பெயரால் அராஜகத்தை ஊக்குவித்தான். அவன் நாகரிகத்தின் பெயரால் நிர்வாணம் அல்லது அரை நிர்வாணத்தை ஊக்குவித்தான். அதனால்தான் நியாயத் தீர்ப்பு நாளில் நேர்மையான மனிதர்களுக்கு மட்டுமே வாய்ப்பு அளிக்கப்படும்.

நல்லடியார்களை இறைவன் தேர்ந்தெடுப்பான். இதுதான் குர்ஆனின் இந்த வசனத்தில் வெளிப்படும் யதார்த்த நிலையாகும். எனது நல்லடியார்கள்தாம் பூமியின் வாரிசுகளாவர்." (குர்ஆன் 21:105)

மனித வாழ்க்கை என்பது இம்மையிலிருந்து மறுமை வரை யிலான உண்மையைக் கண்டறிதலுக்கான பயணம். இவ்வுலகில் இந்தப் பயணம் மிகக் குறைந்த அளவிலேயே நடைபெறுகிறது. மாறாக, மறுமையில் கண்டறிதலுக்கான பயணத்தின் எல்லைகள் இல்லை. இருப்பினும், தனது ஆன்மாவைத் தூய்மைப்படுத்திக் கொண்டு தகுதியான நபராக நிரூபித்த ஒருவரால் மட்டுமே இந்தப் பயணத்தை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியும். ஏழு கடல்களும் இரட்டிப்பாக்கி, கடல்கள் அனைத்தும் மையமாக மாறினாலும் உலக மரங்கள் அனைத்தையும் எழுதுகோலாக மாறினாலும் இறைவனின் வார்த்தைகள் எண்ணிடலங்காது என்று குர்ஆன் சொல்கிறது. அப்போது, இறைவனின் வார்த்தைகள் அனைத்தையும் எழுத மை போதாது.

“பூமியிலுள்ள மரங்களெல்லாம் எழுதுகோல்களாகவும் கடலுடன் இன்னும் ஏழு கடல்கள் சேர்ந்து மையாகவும் இருந்தால்கூட இறைவனின் வார்த்தைகளை எழுதி முடிக்க இயலாது. அவன் யாவற்றினும் வல்லவன், ஞானம் மிக்கவன். (31:27) என்று குர்ஆன் இவ்வாறு வெளிப்படுத்துகிறது.

இது வெறும் ஓர் அறிக்கை அல்ல. ஆனால், இறை நம்பிக்கை யாளர்கள் பின்பற்றவேண்டிய சர்வ வல்லமையுள்ள இறைவனின் கட்டளை ஆகும். இறை நம்பிக்கையாளர்கள் இறைவனின் வார்த்தைகளைக் கண்டறிந்து, தொடர்ந்து அவனுடைய அதிசயங்களையும் ஆற்றல்களையும் உணர்ந்தறிய வேண்டும். குர்ஆனின் முதல் வசனம், “எல்லாப் புகழும் உலகத்தின் அதிபதி யான இறைவனுக்கே” என்பது ஆரம்பம்தான், முடிவு அல்ல. இந்த வசனம் மறுமை உலகத்தைக் கோடிட்டுக் குறிப்பிடுகிறது.

“அனைத்துலகங்களின் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.” (குர்ஆன் 39:75)

இந்த இரண்டாவது வசனம் மறுமையின் மிகவும் சாதகமான சூழலில் முடிவற்ற நிலையாகத் தொடரும். இறுதிக் கட்டத்தை நமக்குச் சொல்கிறது.

பத்தொன்பது, இருபதாம் நூற்றாண்டுகளில் அறிவியலாளர்கள் முதல் கட்டத்தில் இறைவனை உணர ஓர் அறிவியல் கட்டமைப்பை வழங்குவதில் பெரும் பங்கு வகித்துள்ளனர். குர்ஆனிலிருந்து நாம் கற்றுக்கொள்வது போல் மறுமை வாழ்க்கையில் இறை நம்பிக்கையாளர்கள் தங்கள் உணர்தல் பயணத்தில் வானவர்களால் ஆதரிக்கப்படுவார்கள்.

“நாங்கள் இந்த உலக வாழ்க்கையிலும் உங்கள் பொறுப்பாளர்கள்; மறுமையிலும் (உங்களுக்கு உதவியாளராவோம்); உங்கள் மனம் விரும்புகின்ற அனைத்தும் உங்களுக்கு உண்டு. நீங்கள் கேட்பதெல்லாம் உங்களுக்குக் கிடைக்கும். (41:31)

◆◆◆

## தஸ்கியாவின் அளவுகோல்

தஸ்கியாவின் அளவுகோல் என்ன? இஸ்லாமியச் சிந்தனை முறை மற்றும் இஸ்லாமிய வாழ்க்கை முறை ஆகியவற்றுடன் ஒருவர் மிகவும் இணக்கமாக மாறுகிறார். ஒருவர் தனது சொந்த இயல்பின் குரலில் வழிநடத்தப்படுவதாக உணர்கிறார். ஒருவருடைய ஆசைகளுக்கு எதிராக இருந்தாலும் எந்தத் தயக்கமும் இல்லாமல் இதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும்.

தஸ்கியாவின் உண்மையான நோக்கம் இறைவன் மீதுள்ள பற்றுதல்தான். இதுதான் முழு உண்மை. இதை வேறு விதமாகச் சொல்வதானால், ஆன்மா தூய்மைப்படுத்துதல் (தஸ்கியா) ஒருவரை முழுவதுமாக இறைவனின் மீது கவனம் செலுத்த உதவுகிறது. மற்ற எல்லா விஷயங்களிலிருந்தும் விடுபட்டு இறைவன் மீதுள்ள பக்தியைக் காப்பாற்றுகிறது. இதன் முழு அர்த்தத்தில் இறைவன் ஒருவனையே கவனத்தின் மையமாக மாற்றுவதற்கு தஸ்கியா உதவுகிறது.

இறைவனின் பொருத்தத்தை அடைவது ஒரு சாதாரணமான விஷயம் அல்ல. இது மனித ஆன்மாவில் ஒரு முழுப் புரட்சியைக் கொண்டுவருவதற்கு ஒப்பானது. இத்தகைய புரட்சியை அனுபவிக்கும் ஒருவன், இறைவனை முழு அர்த்தத்தில் கொடுப்பவனாகவும் தன்னை முழு அர்த்தத்தில் பெறுபவனாகவும் கருதுகிறார். அவனது சிந்தனை இறைவன் சார்ந்ததாக மாறும். அவனது உணர்வுகள் முழுவதுமாக இறைவனை மையமாகக் கொண்டுள்ளன. அவனது வார்த்தைகளும் செயல்களும் தெய்வீகக் கலாச்சாரத்தை, பண்பாட்டைப் பிரதிபலிக்கின்றன. அவனுக்குள் அடக்கம் வளர்கிறது. அவன் ஒரு மனிதனாக மாறுகிறான். அவனது இதயம் மற்றவர்களை வெறுப்பதற்கு பதிலாக நல்வாழ்த்துகளால்

நிறைந்துவிடுகிறது. அவன் பெருமையுடனும் இழிவானவனாக மாறுவதற்குப் பதிலாக அவன் அடக்கமானவனாக மாறுகிறான்.

அவனுடைய மனப்பான்மை மற்றவர்களிடம் அடங்காமையைக் கொண்டிருக்காது. மாறாக, கீழ்ப்படிதலைக் கொண்டிருக்கும். எல்லா விஷயங்களிலும் மற்றவர்களைக் குறை கூறுவதைவிட தன் தவறுகளுக்கு அவன் பொறுப்பேற்றுக் கொள்வான். மேலும், தேவையில்லாமல் பேசுவதைவிட அமைதியாக இருப்பதையே விரும்புவான். முன் இருக்கையில் அமர்வதற்குப் பதிலாகப் பின் இருக்கையில் அமர்வதையே விரும்புவான்.

அவன் ஒரு வார்த்தை பேசுவதற்கு முன் இறைவன் முன்னிலையில் ஏற்றுக்கொள்ளப்படுமா அல்லது நிராகரிக்கப்படுமா என்று சிந்திக்கிறான். அவன் தனியாக, தனிமையில் இருக்கும்போது பொதுவில் இருப்பதைப் போலவே எச்சரிக்கையாக இருக்கிறான்.

◆◆◆

## தஸ்கியாவும் மரணத்தின் நினைவும்

தஸ்கியாவின் செயல்முறையை முன்னோக்கிச் செல்ல மரணத்தை நினைவுகூர்வது மிகவும் சக்தி வாய்ந்த தூண்டுகோலாகச் செயல்படுகிறது.

மரணத்தை நினைவுகூர்வது மனிதனுக்குள் ஓர் அவசர உணர்வை உருவாக்குகிறது. தஸ்கியாவை நோக்கிய தனது முயற்சியை இன்றே செய்ய வேண்டும்; தள்ளிப் போட முடியாது என்ற உண்மையை மரணம் அவனில் நிலைநிறுத்துகிறது. ஏனென்றால், நாளைய வாழ்க்கை மரணத்திற்கானதா அல்லது வாழ்க்கைக்கானதா என்பது யாருக்கும் உறுதியாகத் தெரியாது.

மரணம் என்ற கருத்தாக்கம் மனிதனுக்கு இறக்கும் தருணத்தை நினைவூட்டுகிறது. அவன் பின்னர் மிகவும் மோசமான சூழ் நிலையைச் சந்திக்க நேரிடும். இந்த மரணத்தின் தருணம் பற்றி குர்ஆன் இவ்வாறு கூறுகிறது.

“அந்நாளில் மனிதர்கள் அனைவரும் அனைத்துலகங்களின் இறைவனுக்கு முன்னால் நிற்பர்.” (83:6)


மனிதனை இறைவனுக்கு முன்பாக வானவர்கள் அழைத்துச் செல்லும் நாளாக அது இருக்கும். வெளிப்படையான, மறைவான அனைத்தையும் அறிந்த இறைவன், பூமியில் மனிதனின் சொல், செயல் பற்றி கணக்குக் கேட்பான். ஒரு (நபிமொழி) மரபின்படி அந்த நாளில் இறைவனுக்கு முன்பாக அனைவரும் நிற்க வேண்டும். இறைவன் மனிதனிடம் கேட்கும் அனைத்து கேள்விகளுக்கும் பதிலளிக்கும் வரை அவனது கால்கள் அங்கிருந்து அசையாது.

மரணத்தை நினைவுகூர்வதென்பது மனித வாழ்வின் மிக நுட்பமான தருணத்தை நினைவுபடுத்துவதாகும். அவன் நிச்சயம்

வரப் போகும் காலத்தைப் பற்றியும் மற்றும் அவனுடைய நித்திய எதிர்காலம் எப்போது தீர்மானிக்கப்படும் என்பதைப் பற்றியும் சிந்திக்க வேண்டும்.

இத்தகைய சிந்தனை நிச்சயமாக ஒரு எழுச்சியை உருவாக்க வேண்டும். இவ்வாறு மரணத்தைப் பற்றிச் சிந்திக்கும் ஒருவன், தஸ்கியாவின் மீது அதீத அக்கறை கொண்டவனாக இருப்பான் என்பது நிதர்சனமான உண்மை. மரணம் வந்தடைவதற்கு முன்னரே ஒவ்வோர் அம்சத்திலிருந்தும் தஸ்கியாவை அடைய இறுதிவரை முயல்வான். ஏனெனில், சீர்திருத்தத்திற்குப் போதுமான நேரம் இல்லை என்ற புள்ளியை அவன் அடைந்து விடுவான்.

◆◆◆



# நிகரற்ற ஆளுமை
# மவ்லானா வஹீதுத்தீன் கான்

1925ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி உத்தரப்பிரதேச மாநிலத்திலுள்ள 'ஆஸம்கர்' எனும் ஊரில் பிறந்து வளர்ந்து, மரபு வழியில் இஸ்லாமியக் கல்வியைப் பயின்று, பல ஆண்டுகளாக தில்லியில் வசித்து வந்த இஸ்லாமிய மார்க்கத்தின் மாபெரும் ஆளுமை; மாபெரும் அறிஞர், மவ்லானா வஹீதுத்தீன் கான் அவர்கள். தமது தொண்ணூற்று ஆறாவது வயதில் 21-04-2021 அன்று காலமான மவ்லானா அவர்கள், கடந்த எழுபத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக இஸ்லாமிய மார்க்கப் பணியையும் எழுத்துப் பணியையும் எவ்விதத் தொய்வுமின்றி செய்துவந்தவர்.

இஸ்லாம் குறித்த பல தவறான கருத்துகளைக் களைந்து, 'இஸ்லாம் ஓர் அமைதி மார்க்கம்' என்பதைத் தம்முடைய கட்டுரைகள் மூலமாகவும் சொற்பொழிவுகள் மூலமாகவும் தொடர்ந்து பரப்பிவந்தவர்; உலக அமைதிக்காகவும் மத நல்லிணக்கத்திற்காகவும் தொடர்ந்து குரல் கொடுத்தவர்.

உலக அமைதிக்கான மவ்லானாவின் பங்களிப்பை அங்கீகரித்துப் பல்வேறு நாடுகளும் அமைப்புகளும் விருதுகளை வழங்கி கௌரவித்துள்ளன. அவற்றுள் சில:

1. Demiurgus Peace International Award by the Nuclear Disarmament Forum AG.

2. Ambassador of Peace Award by the International Federation for World Peace, Korea.

3. Rajiv Gandhi National Sadbhavna Award

4. National Citizen's Award, presented by Mother Teresa.

5. Sayyidina Imam Al Hassan Ibn Ali Peace Award in Abu Dhabi

6. Padma Vibhushan (second-highest civilian award-2021)

1976இல் மவ்லானா அவர்கள் உருது மொழியில் தொடங்கிய ‘அர்ரிஸாலா’ எனும் மாத இதழ், கடந்த நாற்பத்தி ஐந்து ஆண்டுகளாக இடைவெளியின்றி தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறது. இதன் ஆங்கில வடிவம் Spirit of Islam எனும் பெயரில் பெங்களூருவிலிருந்து வெளியிடப்பட்டு வருகிறது.

மவ்லானா அவர்கள் உருது மற்றும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த திருக்குர்ஆனின் எளிய தமிழாக்கம் தற்பொழுது செம்பதிப்பாகத் தமிழில் வெளிவந்து மிகுந்த வரவேற்பைப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

◆◆◆



# தஸ்கியா

## ஆன்மாவைத் தூய்மைப்படுத்துதல்

தஸ்கியா என்றால் தூய்மைப்படுத்துதல் என்று பொருள். அதன் விரிவான அர்த்தத்தில் வளர்ச்சி என்று பொருள். இந்த வகையில் தஸ்கியா என்பதை அறிவுசார் வளர்ச்சி எனலாம்.

மனம் என்பது தேங்கி நிற்கும் ஒன்றல்ல. அது மரத்தைப் போல வளர்ந்துகொண்டே இருக்கும் ஒன்று. அது எப்பொழுதும் வளர்ந்து வரும் ஒரு மரத்தைப் போல இருக்கிறது. இந்த செயல்முறையே அவர்களின் "நம்பிக்கையை மேலும் அதிகப்படுத்துதல்" என்று குர்ஆன் கூறுகிறது. (48:4)

நம்பிக்கையுடன் நம்பிக்கை சேர்ப்பது என்பது உணர்வு நிலையின் வளர்ச்சியாகும். இது அறிவுசார் வளர்ச்சிக்கு மற்றொரு பெயர் ஆகும். உண்மையான நம்பிக்கை என்பது தேக்கமடையாமல் இறைவனைப் பற்றிய நம்பிக்கையில் தொடர்ந்து வளர்வதாகும்.

தஸ்கியா அல்லது அறிவுசார் வளர்ச்சி எவ்வாறு நிகழ்கிறது? இதற்கு சிந்தனைதான் பாதை என்பது ஒரு தொடர்ச்சியான செயல்முறையாகும். குர்ஆன் ஹதீஸ் மற்றும் இறைத்தூதர்களின் வாழ்க்கை - தோழர்களின் வாழ்க்கை பல்வேறு மனித ஒழுக்கங்கள் பிரபஞ்சம், பூமி மற்றும் வானங்கள் பற்றிய சிந்தனை தவிர, விவாதங்களின் போது நடக்கும் சிந்தனைகளும் அடங்கும். இந்தச் சிந்தனைகள் செயல்பாட்டில் புதிய யோசனைகளை வெளிப்படுத்துகின்றன. இதன் மூலம் ஆழமான அர்த்தம் வெளிச்சத்திற்கு வரும் மற்றும் பல்வேறு நிகழ்வுகள், இதுவரை ஆராயப்படாத புதிய அம்சங்கள் ஆகியவை கண்டறியப்படுகின்றன.

www.goodwordbooks.com

GOODWORD